Roll-103
1199
2506.
XX.A.18
மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 2 } 1909-௵ ஜூலை௴ { பகுதி 1

## வேதஸ்வரங்கள்

### THE SWARAS

வேதங்களின் ஸ்வரூபத்தை விவரித்த இடத்தில் அவைகள் அனந்தமாயிருப்பினும், புஸ்தகங்களில் எழுதப்படாமலே தொன்று தொட்டுக் குருமுகமாகக்கேட்டு அத்தியயனம் செய்யப்பட்டு இந்நாள்வரையிலும் மாருது வந்து இருக்கின்றனவென்று சொல்லியிருக்கிரேம். வித்துவான்களது மனம்போன போக்கெல்லாம் வேதங்களை மாற்ற இடங்கொடாமல் அவைகளை முன்னவர்கள் வியாகரணத்தில் ஏற்பட்ட ஸ்வரப்படி அத்தியயனம் செய்துவந்தார்கள். என்றும் சொல்லியிருக்கிரேம். இது ஒன்றுதான் வேத ஸ்வரங்களின் உபயோகம் என்று எண்ணிவிடல்கூடாது. ஸ்வரங்களுக்குவேறுபிரயோஜனங்களும் உண்டு. ஸ்வரங்கள் எழுத்துக்களுக்கும் அவைகளாலாகிய பதங்களுக்கும்ஒருவிதமான ஒற்றுமையை உண்டாக்குகின்றன. இந்தக் குணம் ஸ்வரங்களுக்குஇருப்பதால்தான் ஸங்கீதத்தில் கொஞ்சமேனும் ஞானம் இல்லாதவர்களும்கூட வேதகோஷத்தில் ஒருவிதமான ஸுகம் இருக்கிறதென்று எண்ணுகிருர்கள். வேதங்களில் அடிபடும் பதங்கள் ஒவ்வொன்றின் ஸ்வரத்தை உள்ளபடி அறிவதற்குச் ஸஹாயமாகப் பாணினி தமது வியாகரணத்தில் பலசூத்திரங்களை விதித்திருக்கிருர். இவ்விதிகளைநன்ருக அறிந்துகொண்ட பின்பு வேதங்களை ஸ்வரத்தோடு அத்தியயனம் செய்யவேண்டியது, ஒழுங்காயிருப்பினும், அவ்வாறுசெய்யாமல் நன்ருக வேதங்களை அத்தியயனம்செய்து தேர்ந்த ஆசாரியரிடம் சிஷ்யர்கள் சென்று அவரது ஸஹாயத்தால் வேத வாக்கியங்களை அடிக்கடிஉருவேற்றி வேதங்களைக் கோஷிக்கத் தெரிந்துகொள்வது வழக்கமாய் வந்துவிட்டது

செவிக்கு ஒருவிதமான ஸுகத்தை உண்டாக்குவதைத்தவிர ஸ்வரங்களுக்கு வேறுபிரயோஜனம் உண்டா இல்லையாவென்ருல், உண்மையில் ஸ்வரங்களுக்கு வேறு பிரயோஜனங்கள் உண்டு. இதைத்தவிர வேறு பிரயோஜனம் இல்லை என்ருல், 'நமக்கு இவ்விஷயத்தில் கஷ்டத்திற்குத்தகுந்த பலன் இல்லை. மேலும் கேவலம் அநித்தியமான இந்திரிய ஸுகத்திற்காகவா நாம் இவ்வளவு பாடுபடுகிறது' என்ற எண்ணம் நமக்கு உண்டாகும். சிறந்த ஸங்கீத

ரூபமாகிய வேதகோஷத்திற்குக் கேவலம் இந்திரிய திருப்திமாத்திரம்நோக்கமாகமாட்டாது இம்மாதிரியான ஸங்கீதவிசேஷங்களைக் கேட்குங்கால் நமதுமனம் இவ்வாறு உலகப்பற்றற்று ஆனந்தக்கடலில் மூழ்கி லயித்திருக்கிறது என்பதைசெவிக்குண்டாகும் ஸுகம் ஒருவாறு குறிப்பாகக் காட்டுகிறது.

ஒற்றுமை அல்லது பொருத்தம்என்பதால்தான். விசித்திரப்பிரபஞ்சம் ஒழுங்காய் நடைபெற்றுவருகின்றது. ஒரு கணமாவது பொருத்தமின்மை யிருக்குமாயின் பிரபஞ்சத்திற்கு நாசம் வந்துவிடும். அண்டபிண்டசராசரங்கள் அனைத்தும் தம்முள் ஒற்றுமையாயிருந்து தொழிற்படுவதே பிரபஞ்சத்தில் காணப்படும் ஸங்கீதம். இம்மாதிரியாகக் கடவுளாலே ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்ச ஸங்கீதத்தைக் கண்டுதான் மஹான்களும் மந்திரதிரஷ்டாக்களும் அடியற்ற மரம்போல் விழுந்து தண்டனிட்டு நாத்தழுதழுக்க ரோமம் சிலிர்ப்ப இவைகளை ஸ்ருஷ்டித்தக் கடவுளைப் புகழ்ந்து பாடுகின்றனர். இவர்கள் புகழ்ந்துபாடும் இந்த ஸங்கீதமானது வீண் மனோபாவனையல்ல கட்டுக்கதையுமல்ல. இந்தப் பிரபஞ்ச ஒழுங்கால் ஏற்படும் சிறந்த ஸங்கீதத்தைப்பற்றி மனிதன் தியானம் செய்யச்செய்ய அவனது ஆத்மா பரிசுத்தமாகி விருத்தியடைந்து 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கே' நிற்கும் பராபரவஸ்துவாகிய பரமாத்மாவைப்போல ஆகும். கேவலம் மனுஷ்ய ஸங்கீதங்கள் யாவும் இச்சிறந்த ஸங்கீதத்தை அறிந்து ஆனந்திக்கும் திறமையை மனிதனுக்கு உண்டாக்குகின்றன. ஆகையால் தான் தேவதைகளும் மஹான்களும் கவிகளும் நல்ல ஸங்கீதத்தை மிகவிரும்புகிறார்கள். நம்முள் மிக்க ஸூக்ஷ்மமென்று வழங்கிவரும்ஸங்கீதவிசேஷங்களைப் பிரபஞ்சத்தில் காணப்படும் ஸங்கீதத்தோடு ஒப்பிடுங்கால் குழந்தைகளது மழலைச்சொல்லிற்குநிகர் என்றுதான் சொல்லவேண்டும்.

எந்த விடத்திலும் எண்ணங்களிலாவது, பதங்களிலாவது, காரியங்களிலாவது ஒற்றுமை காணப்படுமாயின் அங்கு ஸங்கீதம் குடிகொண்டிருக்கும். பல பெயர்கள் சேர்ந்து ஒரு தொழிலை ஒற்றுமையாய் நடத்தி வருவாராயின் அங்கு பிரபஞ்ச ஸங்கீதத்தின் லேசம் இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு குடும்பத்திலிருப்பவரிடம் அந்நியோந்யம், பக்ஷம் ஒற்றுமையாய் வேலைசெய்தல் முதலிய குணங்கள் அமைந்திருக்குமாயின் அங்கும் இந்த ஸங்கீதத்தின் லேசம் இருக்கிறது என்று சொல்லலாம். ஸங்கீதலேசம் அற்ற இடத்துச் சிறந்தவர் தங்கார். இதனால்தான் தேவதைகள் சண்டை வாக்குவாதம் முதலியவைகள் நடக்கும் இடத்தைவிட்டு ஓடிப்போய் விடுகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

தொன்றுதொட்டு ஸகல ஜாதியாரும் ஸங்கீதத்தின் மஹிமைகளைப் பலவாறு எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். யவன தேசத்தில் ஆர்பியஸ் என்பவர் கொடியமிருகங்கள் நரகவாஸிகள் முதலியவர்களைக் கூட்டத்தமது ஸங்கீத இனிமையாலும் சிறப்பாலும் சித்திரம்போல் அசைவற்றிருக்கும்படி செய்துவிட்டாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. பக்தர்களுள் சிறந்தவராகிய நாரதர் ஸதா மஹதியென்னும் வீணையைக் கையில் ஏந்திக்கொண்டு தெய்வத்தன்மை நிறைந்த ஹரிநாம ஸங்கீர்த்தனத்தை விடாமல் செய்துகொண்டு பரவசராய் இருப்பதாகப் புராணங்கள் கூறும். ஸகல துர்க்குணங்களும் நிறைந்த இராவணன் கூடப் பரமசிவனைத் தனது ஸாமகான விசேஷத்தால் திருப்திப் படுத்தினனென்று தெரிகிறது.

மேனாட்டுப் பிரகிருதி சாஸ்திரவித்துவான்கள் ஸங்கீதத்தின் மஹிமையை நமது ஊனக்கண்ணுக்குப் புலப்படும்படி காட்ட ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்மைச் சுற்றிலுமுள்ள காற்று ஒழுங்காய் அலைபோலத்தொடர்ந்து வருமாயின் ஸங்கீதமுண்டாகின்றது

என்பதும் ஒழுங்கின்றித் தாறுமாறாய் வருமாயின் ஸாதாரண சப்தமுண்டாகும் என்பதும் இப்பிரகிருதி சாஸ்திரம் வாசிக்கும் மாணாக்கர் அறிந்தவிஷயமே. இவ்வாறு ஸங்கீதத்தை உண்டாக்கத்தக்க ஒழுங்கான காற்றின் அலைகள் அருகேயிருக்கும் தாம்பாளத்தில் பரப்பியிருக்கும் மணலிலாவது பாத்திரத்தில் நிறைந்திருக்கும் தண்ணீரிலாவது படுமாயின் அவைகளில் பார்வைக்கு அழகாயிருக்கும் உருவங்கள் உண்டாகும். இவ்வாறு ஸ்தூலமாயிருக்கும் பொருள்களிலும் ஸங்கீதமானது அழகிய உருவை உண்டாக்குமேயானால், அப்படியே பஞ்சபூதங்களாகி அதிஸூக்ஷ்மமாயிருக்கும் மனது முதலிய கண்ணுக்குப் புலப்படாது தெழிற்படும் அங்கங்களில் ஸங்கீதம் ஏன் அழகிய உருவை உண்டாக்கி மனோலயத்தை உண்டாகாது? ஸங்கீதம் சென்று தாக்கும் அங்கம் ஸூக்ஷ்மமாய் இருக்கஇருக்க அதில் பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்குமென்றே சொல்லலாம். ஆதிவியாதி முதலியவைகள் யாவும் தேகங்களின் பரமாணுக்களுள் ஒற்றுமைநிலை குலையுங்காலத்தே உண்டாகின்றன. அப்பொழுது ஏற்பட்ட ஸ்வரங்களோடு வேத மந்திரங்கள் சிலவற்றைச்சொன்னால் அவை தேகத்தின் பரமாணுக்களை அப்பொழுது இருந்த குலைந்த நிலையினின்றும் மாறச்செய்து அப்பரமாணுக்களுள் ஒற்றுமையை உண்டாக்கிக் கஷ்டப்படும் நோயாளிக்குச் சீக்கிரத்தில் தேகஸௌக்கியத்தைத் தந்து நோயைத்தீர்க்கலாம். சூரியவெளிச்சமும்,வர்ண வெளிச்சங்களும் எவ்வாறு சிற்சில நோய்களைத் தீர்க்கின்றனவோ அவ்வாறே நல்ல ஸ்வரங்களும் சிற்சில நோய்களைத் தீர்க்கும் திறனுடையன. எப்படிப்பட்ட மனிதனும், சிறந்ததாயும் சுத்தமாயுமுள்ள பொருளடங்கிய வேதமந்திரங்களை அவைகளுக்கு ஏற்பட்ட ஸ்வரங்கள் தவறாது நாள்தோறும் சொல்லிக்கொண்டு வருவானேயானால், அவன் கூடிய சீக்கிரத்தில் மனோவிலாசம் சுத்தம் மனோதிடம் முதலியநற்குணங்கள் வாய்ந்தவனாவான் என்பதற்கு ஸந்தேகமில்லை.

ஸங்கீதமானது ஸ்தூல விஷயங்களை ஒழுங்குபடுத்துவதோடு ஸூக்ஷ்ம விஷயங்களையும் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துகின்றது என்பதை யுக்திபூர்வமாக ஸ்தாபிக்கலாம். ஒவ்வொரு பதத்திற்கும் அர்த்தம் என்பது ஒன்றுஉண்டு. பொருளும் ஒலியும் சேர்ந்தே பதமாகின்றன. சில வாதிகள் ஒலி முன்பு உண்டானதென்றும் பொருள் பின்பு ஏற்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இவர்களே வையாகரணிகள். வேறுதிறத்தாராகிய வேதாந்திகள் இதை ஆக்ஷேபித்து முதலில் பொருள் உண்டானது என்றும் அதன் பின்பு தான் அது ஒலிரூபமாய்ப் பரிணமித்ததென்றும் ஸித்தாந்தம் செய்கிறார்கள். இந்த ஆக்ஷேப ஸமாதானங்களை இங்கே விவரிக்கப் புகுந்தால் அவை வாசிப்போருக்கு எளிதில் விளங்கா. நாம் எந்தக்கொள்கையைப் பின்பற்றியபோதிலும், ஒலியும் பொருளும் தம்முள் நெருங்கி ஸம்பந்தித்து ஒன்றை ஒன்று ஒழுங்குபடுத்துகின்றது என்பதை ஆக்ஷேபித்தல் முடியாது. புதிய பிரகிருதி சாஸ்திரமானது ஒலி என்பது வஸ்துக்களின் அணுக்கள் அங்குமிங்கும் வேகமாய் அசைதலால் நமக்குப் புலப்படும் ஒரு காரியம் என்று நிரூபிக்கின்றது. பொருளோ சித்துருவம், முன்சொல்லியவாறு தொழிற்படும் வஸ்துக்களுக்கு உயிர்தரும் திறமை யுடையது. பதங்களிலாவது பிராணிகளிலாவது காணப்படும் யாவும் பிரபஞ்சத்தில் எங்கும் காணப்படும் சித்தாகிய கடவுளின் ஓர்பாகம். ஒலியென்ற தேகத்தில் கடவுள் உருவாகிய பொருள் என்ற உயிர் குடிகொண்டிருப்பதே பதமாகும். ஆகையால் பதம் என்பது ஓர் பிராணியைப்போன்றது. நாம் வெளியிடும் வாக்கியங்கள் நமது சிற்றறிவுக்கெட்டியபடியே சில விசேஷங்களையுடையனவாயிருக்கும். வேதங்களோ கடவுளது மூச்சுக் காற்றுக்களாகையால் கடவுள் பேரறிவிற்கேற்றபடி எல்லாவிசேஷங்களையும் அடக்கியுள்ளனவாயிருக்கும். நமதுதேகஸுகத்தை விருத்திசெய்ய நமக்கு எண்ண முண்டாகுந்

க்கல் வைத்தியர்களால் சிறந்ததெனக் கொடுக்கப்பட்ட மருந்துகளை எவ்வாறு உட்கொள்ளுகிறோமோ, அவ்வாறே நமதுமனதை ஸுகப்படுத்தி நாம் சாந்தியை அடையவேண்டும் என்ற எண்ணம் வந்தகாலத்தில் பரமவைத்தியராகிய பரம்பொருள் வேதமந்திரங்கள் ரூபமாகக் கொடுத்துள்ள மருந்துகளை ஸ்வரம் தவறாது நாள்தோறும் அத்தியயனம் செய்தல் ரூபமாக நாம் உட்கொள்ளவேண்டியது அவசியம்.

ஸ்வரங்களின் பிரயோஜனங்களைப்பற்றி வேறுவிதமாகவும் ஆராய்ச்சி செய்யலாம். சித்துருவாகக்காணப்படும் பிரபஞ்ச பாகத்தை உற்று நோக்கினால்வெவ்வேறாகக் காணப்படும் சித்துக்கள்தோன்றும். அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கேசேர்த்து நோக்கில் ஸர்வ வல்லமையுள்ள பரம்பொருளாகவே முடியும். வெவ்வேறாய்க்காணப்படும் ஒவ்வொரு சித்தும் தேவதையென்று சொல்லப்படும். எவ்வாறு பிரபஞ்ச வஸ்துக்கள் ஒவ்வொன்றிற்கும் விசித்திரமான குணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்வாறு ஒவ்வொரு தேவதைக்கும் குண வைசித்திரியங்கள் உண்டு. சித்துருவாயிருக்கும் ஒவ்வொரு தேவதையும் தனக்குத்தகுந்த பாஷையின் மூலமாகிய ஒலி ரூபமான எழுத்தில் குடிகொண்டிருக்கின்றது. இக்காரணம்பற்றியே ஒருமந்திரத்திலுள்ள ஒருஎழுத்தை பீஜாக்ஷரம் என்றும் அது ஒரு தேவதைக்கு இருப்பிடம் என்றும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தத்தேவதைகளுக்குத் தத்தமக்குத்தகுந்த ராகத்துவேஷங்கள் உண்டு என்பது முன்னமே சொல்லப்பட்டது. இதனால் வேதமந்திரங்களில் உள்ள அக்ஷர அமைப்பின் நோக்கம் எளிதில் விளங்கும். ஒற்றுமைப்படாத எழுத்துக்களைச் சேர்த்து உச்சரித்தல் அவைகளின் ஒலிகள் தம்முள்ளும், தேவதைகள் தம்முள்ளும் விரோதத்தையுடையனவாய் அவை உச்சரிப்பவனது தேகத்தையும், ஆத்மாவையும் நிலைகுலையும்படி செய்து, அவனுக்குத் திராக்கஷ்டங்களை உண்டாக்கிவிடலாம். வேதங்கள் முழுவதும் இம்மாதிரியான ஒலிப்பொருத்தமும் தேவதைப்பொருத்தமும் வாய்ந்த வாக்கியங்கள் நிறைந்தவைகளே. இவைகளுக்கு முரணின்றி வேதங்களை ஒருவன் அத்தியயனம் செய்வானேயானால் அவனுக்கு மாறாமேன்மையுண்டாகும். இப்பொருத்தங்களைக்கவனியாமல் ஒருவன் வேதங்களை அத்தியயனம் செய்வானேயானால் அவனுக்கு எதிர்பார்க்காதகெடுதிகள் ஸம்பவிக்க இடமுண்டு.

இந்தக் கொள்கையை விளக்குவதற்கு சிக்ஷையில் ஒரு கதை இருக்கிறது. முன்னொரு காலத்தில் இந்திரனைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு அஸுரன் யாகம்செய்து வந்தான். அவன் மந்திரம் சொல்லுங்கால் 'நான் இந்திர சத்ருவாக விளங்கட்டும்' என்று சொல்லவேண்டிவந்தது. இதை இப்பொருள்படும்படி சொல்லவேண்டுமானால் அஸுரன் இந்திரசத்ரு என்ற பதத்தில் இறுதியிலுள்ள பாகத்தை அழுத்தி உச்சரிக்கவேண்டியது. இவ்வாறு செய்யாது ஏதோ அஜாக்ரதையினால் இப்பதத்தின் முதல்பாகத்தை அழுத்திச் சொல்லிவிட்டான். இவ்வாறு சொன்னதும் அவன் சொல்லிய வாக்கியம் அவன் எண்ணத்திற்கு நேர்விரோதமாய்ப் பொருள்பட்டது, அதாவது 'நான் இந்திரனால் கொல்லப்பட்டவனாக விளங்கட்டும்' என்பது. இவ்வாறு அந்த வாக்கியத்திற்குப் பொருள் உண்டாக, உடனே இந்திரனது வஜ்ராயுதத்தால் அந்த அஸுரன் அடிபட்டு விழுந்தான். இதனால் சிக்ஷையானது 'தகுந்த ஸ்வரத்தோடு உச்சரிக்கப்படாத வேதவாக்கியம் பயனற்றதாய்ப்போகும். அதன் உண்மைப்பொருள் வெளிவராது, ஸ்வரம் தப்பிய வாக்கியமானது இந்திர சத்ருவென்ற பதம் ஸ்வரம் தப்பி உச்சரித்த அஸுரனை எவ்வாறு கொன்றதோ அவ்வாறே உச்சரிக்கும் யஜமானனைக் கொல்லுவதற்கு ஓர் வஜ்ராயுதமாகுமே ஒழிய வேறில்லை' என்று கூறும்.

# "ஸர் தாமஸ் மன்ரோ"

"குடிகளின் நேசன்"

**SIR THOMAS MUNRO**



ஆதியில் இந்தியாவிற்கு வந்தநிரம்ப புத்திசா லிகளான ஆங்கிலேய துரைத்தனத்தார்களில் ருவரும், இந்திய குடிகளுக்கு முக்கியமான ்தருமான தாமஸ் மன்ரோ கி. பி. 1761-ஹு மீ 27௳, ஸ்காட்லாந்துதேசத்தில் கிளாஸ்கோ ரத்தில் பிறந்தார். ஒரு ஸமயத்தில் மிகுந்த ரிகரா யிருந்து வியாபார நஷ்டத்தினுல் லக தரித்திரராய்ப் போன ஒரு வியாபா ன் மகன். தாமஸ் தேகதிடமும், நல்லமா யும், வசிகரமுமுள்ள ஒருபையன். அநிபா யத்திலேயே அவருக்கு விடாமுயற்சியும், இதரபாஷைகளைக் கற்கும் ஸாமர்த்தியமும் உண்டென்பது தெரிந்தது. கிழக்கு இந்தியா கம்பெனியார் உத்தியோகத்தில் ஒரு ராணுவ உத்தியோகஸ்தரின் உதவியாக 1780ஹு ஜனவரிமீ 19௳ சென்னைவந்துசேர்ந்தார்.

உத்தியோக முதல்பாகம் 1780-1792.—மிஸ்டர் மன்ரோ இந்தியாவிற்குவந்த ஸமயத்தில் ஆங்கிலேயர் நிரம்ப சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்கள், மைஸூர்தேசத்தை யாண்டுவந்த கெட்டிக்காரனும் பலசாலியுமான "ஹைடர் ஆலிகான்" கர்னுடக தேசத்திலிருந்து ஆங்கிலேயரைத் துரத்த அதைப் படையெடுப்பதாக பயமுறுத்தினுன். மதிராஸ் ராஜாங்கத்தார் அதை அலக்ஷியம்செய்து தங்களைக் காக்க ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. மேலும் ராஜாங்க அங்கத்தினர்கள் தங்களுக்குள் மனம் பொருத்தமில்லாமல் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். மன்ரோ வந்து கொஞ்சநாளைக்குப் பிறகு ஹைடர்ஆலி நிஜமாகவே படையெடுத்தான். அவன் வரும் வழியில் கொளுத்திய கிராமங்களில் எழுந்ததீயானது பரங்கிமலையிலிருந்து தெரிந்தது. ஜனங்கள் பயந்து சென்னையில்வந்து அபயம் புகுந்தார்கள். இராஜாங்கத்தார் விழித்துக்கொண்டு அவஸரத்தில் செய்த பிரயத்தனங்கள் போதுமானதாயில்லை. சேனுதிபதி காஞ்சிபுரத்தில் கூடியிருந்த ஒரு பெரும்படையை நடத்த ஆரம்பித்தான். மிஸ்டர் மன்ரோவும் அங்குபோய்ச் சேர்ந்தார். கிருஷ்ணு நதிக்கரையிலிருந்த கர்னல் பெயிலியின் சேனையும் திரும்பிவரும்படி உத்தரவுபெற்றது. ஹைடர் ஆலி மத்தியில் நின்று இரண்டு சேனைகளும் ஒன்றுசேரவொட்டாமல் தடுத்து பெயிலியின் சேனையைத்தோற்கடித்தான். இதைக்கேட்டு வங்காளசேனுதிபதி ஸர் ஐர்கூட் சென்னைக்கு வந்து சேனையை நடத்த ஆரம்பித்தார். ஆங்கிலேயர் யுத்தஸன்னத்தராகுமுன் ஹைடர் ஆலி அவர்கள் ஸேனையைச் சின்னபின்னமாகக்கலைத்துக்கர்னுடக தேசமெங்கும் தான் ஜெயம் கொண்டான். இருந்தபோதிலும் "கூட்"யுத்தத்திற்கு ஆரம்பித்ததும், மன்ரோ ஒரு சிபாய் சேனையுடன் அவரைச் சேர்ந்து, பரங்கிப்பேட்டையில் ஹைடர் ஆலியைத் தோற்கடித்துவிட்டார்கள். இதுமுதல் ஐந்து வருஷங்களுக்கு மன்ரோ வெகு இடங்களில் கோட்டைகளைக் காப்பாற்றும் வேலையிலிருந்து, பிறகு இரண்டு வருஷங்களுக்கு ரீட் துரையின் கீழ்வேலை கற்றுக்கொ

ண்டார். மைஸூர் ராஜ்யத்தில் தன் தகப்பனுக்குப் பின்பட்டத்திற்குவந்த திப்பு ஸுல்தானோடு நடந்தயுத்தத்தில் மன்ரோ அமர்ந்திருந்தார். 1792ல் யுத்தமுடிவில் அந்த ராஜா தோற்றுப்போய் கம்பெனியாருக்கு "பிராமஹால்" "திண்டுக்கல்" இரண்டையும் கொடுத்து அதற்கு நடந்த உடன்படிக்கைப்படி திப்பு தன் குமாரர் இருவரையும் பிணையாக ஒப்புவித்தான். அவர்களை யழைத்துக்கொண்டு ஒருசேனையுடன் மன்ரோ சென்னைவந்து சேர்ந்தார்.

இரண்டாம் பாகம்.—1792-99-திப்பு கொடுத்த பிராமஹால் இப்போதிருக்கிற 'சேலம்' 'சித்தூர்' இந்த ஜில்லாக்களின் ஓர்பாகம். அது வெகு ரமணீயமாயும், இன்பமாயுமுள்ள ஒரு இடம். இங்குமங்கும் குன்றுகள் நிறைந்து பார்ப்பதற்கு ஆனந்தமாயிருக்கும். தென் இந்தியாவில் இதுவரையில் "ஸிவில்" உத்தியோகஸ்தர்கள் நடத்தின இந்த ராஜ்யபாரம் ஸரியாயில்லாததனால், டிப்புவுடன் தானே யுத்தத்தை நடத்தின 'கவர்னர் ஜெனரல்' ஆகிய "கார்னவாலிஸ் பிரபு", ராணுவ உத்தியோகஸ்தரைக்கொண்டு ராஜ்யத்தை நடத்த உத்தேசித்து காப்டின் ரீட் என்பவரை பராமஹால் ரிவினியு அதிகாரியாக நியமித்து, மன்ரோவை அவருடைய உதவிகளில் ஒருவராய் ஏற்படுத்தினர். மன்ரோவும் தன் புது உத்தியோகத்தை வெகு ஆவலுடன் செய்ய ஆரம்பித்து, அந்த ஜில்லாவினிடத்தில் அவருக்கு வெகு அபிமானமுண்டாகி, தர்மபுரியைத் தனக்கு "அஸூர்" ஆக ஏற்படுத்திக்கொண்டு, பொழுது போக்குவதற்காக ஒரு உத்தியானவனமும் அமைத்துக் கொண்டார். இருந்தாலும் எப்போதும் அங்குதங்காமல் ஜில்லா முழுவதும் ஓயாமல் சுற்றிக்கொண்டேயிருந்தார். வெயில் அதிக தீக்ஷண்யமாயிருக்கிற மேமாதத்தில்கூட அவர் ஸர்கூட்டில் இருந்ததாகத் தெரிகிறது. அந்த ஜில்லாவின் அழகை அவர் வெகு நன்றாய் அனுபவித்தார் என்று தோன்றுகிறது. ஜனங்களிடத்தில் வெகு சாதாரணமாய்ப் பேசி அவர்களோடு தானும் ஒருவராகயிருந்தார். தான் வெளியே நடந்து போகும்போது ஜனங்கள் அவரை நெருங்கி, தங்கள் பயிர்கள் முதலிய இதர ஸமாசாரங்களைப்பற்றிப் பெருங்கதைகள் சொல்வார்கள். அவரும் அவைகளை குமாஸ்தா, சேகவன், இவர்கள் உதவியின்றியே பொறுமையாய்க் கேட்பார். அவர் சாப்பாடு, "கொய்யரிசிக்கஞ்சி" "வாழைக்காய்க்கறி" இவை போன்ற வெகு ஸாதாரணமானவைகள். கிராமம்கிராமமாய்ப்போய் குடிகள் கொடுக்கவேண்டிய வரியைத் தீர்மானிப்பதிலேயே அவருக்கு வேலை ஸரியாய் இருந்தது. ஜனங்கள் தங்கள் குடும்பங்களில் வெகு ஸஹஜமாகிய தகப்பன் பட்டகடன், சகோதரவஞ்சனை, பாடுபடும் மனுஷியாள் இறந்து போதல் முதலிய பலஸமாசாரங்களையும் சொல்லித் தங்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஹைடர், திப்பு இவர்கள் நாளில் பிராமஹாலில் வரிவாங்கின அட்டூழியத்தைக் கேட்ககர்ண கடூரமாயிருக்கிறது. ராஜாவுக்கும் ஜனங்களுக்கும்நேரான ஸம்பந்தமேகிடையாது. ஸர்காருக்கு இவ்வளவு வரிகட்டுகிறதாக சிலர் ஒப்புக்கொண்டு, அதைவிட எத்தனையோ பங்கு அதிகமாய் ஜனங்களிடத்திலிருந்து கச கிப்பிழிந்து ஸத்தை உருஞ்சுவது போ வஸூல்செய்து, ராஜாவுக்குக் கொஞ்சம் கொடுத்து மிகுந்ததைத் தாங்கள் உண்டு பிழை தார்கள்.

இந்த கஷ்டத்தைநிவர்த்திப்பதேமன்ரோவுடைய முக்கியகருத்தாயிருந்தது. குடிகளிடத்திலிருந்து வரிவாங்குவதற்கு "ரயட் வாரி ஸிஸ்டம்" என்பதை ஏற்படுத்தி குடிகளுக்கு நிரம்ப சௌக்கியத்தை யுண்டுபண்ணினர். வருஷம் ஒருமுறை ஜமாபந்தி நடத்தி, குடிகளுக்கு பட்டாக்கொடுத்து, பட்டாவில் கண்ட நிலங்களுக்கு அவர்கள் கிஸ்தி ஸர்காருக்கு நேரில் கட்டிவரும்படி ஏற்பாடு நடந்தது. ஒவ்வொரு பட்டாதார்களுக்கும் தங்கள் நிலங்

களை உள்குத்தகைக்கு விடவும், தானம், கிரயம், போக்கியம் இவைகள் மூலமாய் வேறுபேரில் மாற்றவும் யதேச்சையாய் பாத்தியம் உண்டாயிற்று. வரி ஸரியாய் கொடுக்கிறவரையில் நிலத்தில் அவர்கள் பாத்தியம் குறைவதேயில்லை. அவர்கள் வருஷாவருஷம் தம்நிலத்தை விருத்திசெய்துகொள்ளவும், வேண்டாமென்றால் குறைத்துக்கொள்ளவும் ஸ்வதந்திரம் இருந்தது. இந்த மாதிரியான ஏற்பாட்டை பிராமஹாலில் உண்டுபண்ணினார். மன்ரோ அங்கிருந்தகாலத்தில் அந்த ஜில்லாமுழுவதும் அளந்து கட்டி மொத்தரி வெளியும் தீர்மானிக்கப்பட்டது. அவர் அங்கிருந்த கடைசி வருஷத்தில் அந்த வருஷகிஸ்திமுழுவதும் வெகுசுலபமாயும் கொஞ்சங்கூட பாக்கியில்லாமலும் வஸூல் செய்யப்பட்டதென்றால் அவருடைய ராஜ்யபாரத்தைபற்றி நிரம்ப சிலாகித்தே சொல்லவேண்டும்.

மூன்றாம்பாகம்.—1799-1801-திப்பு ஸுல்தானோடு நடந்த கடைசியுத்தத்தில் அவன் இறந்துபோக, ஆங்கிலேயர், மஹாராஷ்டிரர், நைஜாம் இவர்களுக்குள் நடந்த உடன்படிக்கைப்படி மேல்ஸமுத்திரக் கரையிலுள்ள கன்னட தேசம் ஆங்கிலேயர்க்குக் கிடைத்தது. அந்த தேசத்தில் ஒழுங்கான ராஜாங்கம் ஏற்படுத்த மன்ரோவை அனுப்பினார்கள். தான் முந்தியிருந்த இடத்திலேயே இருக்கவேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தபோதிலும் ஸர்கார் உத்திரவிற்குள்பட உடனே கன்னடம் போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் சற்றுநிதானிப்பதற்குக்கூட பொழுது இல்லாமல் வேலை அவ்வளவு கஷ்டமாயிருந்தது. இவர் வேலையில் அதிக திறமையையுள்ளவராயிருந்தும் அத்தேசம் அவருக்கு முற்றும் ஒத்துக்கொள்ளாததனாலும், அதிகமழையினாலும், அவர்இஷ்டப்படி ஸர்கூட் போகவும், வேலை நடத்தவும் ஸரிப்படவில்லை. நிரம்ப தொந்திரவுக்காரர்களாயிருந்த அவ்விடத்து ஜனங்கள் இவருடைய வசீகர சக்திக்கிணங்கி வெகுஸமாதானமாய் விட்டார்கள். மன்ரோவும் தனக்குப் பிரியமான ரைட்வாரி மாதிரியை வரி வசூலிற்கு நாளடைவில் ஏற்படுத்தினார். இவ்விதமாக கன்னட ஜில்லாவை சீர்திருத்தி ஒழுங்கு செய்து வந்தார்.

நான்காம் பாகம்.—1801-1808 —இப்படியிருக்கையில், ஆங்கிலேயராஜாங்கத்தாரோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளை, நைஜாம்நிறைவேற்ற முடியாததனால் "பல்லாரி," "அநந்தப்பூர்," "கடப்பை," "கர்னூல்," "பால்காட்" ஆகிய இந்த ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான். மேஜர் மன்ரோவை இவைகளுக்கு முக்கிய கலெக்டராக நியமித்தார்கள். அவர் அங்கு போகும்போது அந்த பிரதேசத்தின் நிலைமை வெகு பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. நைஜாம் அதிகாரத்தை நிராகரித்த சில்லரைபாளையகாரர் சிலர் இந்த தேசத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். நீண்டகாலம் நடந்த ஒரு யுத்தத்தினாலாவதுபோல வெகுகஷ்டம் வந்துவிட்டது. ஸைன்னியத்திற்குசம்பளம்கொடுக்க முடியாமல் கிராமங்களில் குடிகளைத் தொந்திரவுசெய்து கொள்ளையடித்தார்கள். இதுவும் போராமல் ஒருவறள்பாழ் ஏற்பட்டது. இந்த தேசத்தில் மேஜர் மன்ரோவின் முதல்காரியம் ஒழுங்கும் சீட்டமும் உண்டுபண்ணி பாளையக்காரர்களையடக்கி ஜனங்களிடத்தில் சாதாரணமாய் பழகி தன்னிடத்தில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டாக்கினார். வரியும் இலகுவாய் வசூல்செய்யப்பட்டது. ஜனங்களும் வெகு பிரீதியாய் "கர்னல்தொரைகாரு" என்று சொல்லிவந்தார்கள். மேஜர் மன்ரோ இரஜா வாங்கிக்கொண்டு ஸ்காத்லாந்திற்கு போய் 6-வருஷம் இருந்தார். தான் பாலியத்தில் ஒடியாடின விடங்களைபார்த்து சந்தோஷித்தபோதிலும், தன் தாயார் இறந்துபோய் தகப்பனாரும் அதிக விருத்தாப்பியராய் விட்டதனால் அவருக்கு சந்தோஷம் குறைவாகவேயிருந்தது. அப்பொழுது பார்லிமெண்டு மஹாசபையார் இந்தியதுரைத்தனத்தாரைப்பற்றி செய்துகொண்டிருந்த விசாரணையில் இவர்சாட்சி நிர

ம்ப உபயோகமுள்ளதா யிருந்தது. இவர் கொடுத்த அபிப்பிராயங்களுக்கு அதிககௌரவம் ஏற்பட்டு சென்னை இராஜதானியில் நியாயம் நடந்தேறி வருவதை விசாரிக்க இவரை ஒரு தலைமை உத்தியோகஸ்தராக நியமித்தார்கள்.

ஐந்தாம்பாகம்.—1814-1819. கர்னல் மன்ரோ அதிக குணசாலியான "மிஸ்ஜேம்ஸ் காம்பெய்" என்பவளை விவாஹம் செய்துகொண்டு உடனே இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போதிருந்த குறைகள், வரி வசூல்செய்கிற கலெக்டர்கள் நியாயவிசாரணை தெரியாமலும், நியாயவிசாரணைசெய்கிற ஜெட்ஜுகள் ரெவினியு அனுபோகமில்லாமலும், யோக்கியதையுள்ள ஹிந்துக்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் ராஜாங்கத்தில் நல்லகௌரவமும் நம்பிக்கையுள்ள உத்தியோகம் குடுக்கப்படாமலும் இருந்தன. இந்தக்குறைகளை வெகு சிரமப்பட்டு நிவர்த்திக்கையில் மஹாராஷ்டிரயுத்தம் (1817-18) நேர்ந்து கர்னல் மன்ரோ அங்குபோய் வேலைசெய்யும்படி நேர்ந்தது. இந்த இராஜதானிக்கு அருகாமையிலுள்ள "தார்வார்" முதலானஜில்லாக்களை அடக்கியாளப் போய் அஸாத்தியசூரராய் நின்று, இராஜதானிமேல் பிறர்படையெடுக்க வொட்டாமல் தடுத்து, ஜனங்களிடத்தில் சொல்லி வரியை தங்களிடத்தில் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்தார். இந்த யுத்தசிரமத்தினால் கர்னல் மன்ரோ உடம்பு மெலிந்து, பலஹீனமடைந்து ஸம்சாரஸஹிதமாய் திரும்பி ஸ்காத்லாந்திற்குபோய்விட்டார்.

ஆறுவது அல்லது கடைசிபாகம்.—(1820-1827)ஊருக்குப்போய் கொஞ்சகாலத்திற்கெல்லாம் அவரை சென்னை ராஜதானிக்கு கவர்னராகநியமித்தார்கள். 1820௵ ஜூன்௴ 8௳ திரும்பிவந்து 1827௵ ஜூலை௴ 4௳ வரையில் இந்த உன்னதபதவியை வெகுகாம்பீர்யமாய் வஹித்தார். அவருக்கு "ஸர்" என்னும் பட்டம்கொடுத்து அவர்பெயர் "ஸர் தாமஸ் மன்ரோ" என்று ஆகிவிட்டது. இவர் தான் கவர்னராக இருக்கும்போது வேலை செய்து அவ்வளவு சிரமப்பட்டு தனக்கு ஏற்பட்ட உத்தமபதவியை நல்லமனச்சாட்சியுடன் வகித்தார். அவர் இந்துக்களையும் மஹம்மதியர்களையும் கட்டுமானவரையில் நல்ல உத்தியோகத்தில் அமர்த்தவும், ராஜாங்கத்தில் அவர்களை நன்றாய் பழக்கவும், உத்யோகத்தில் அமர்ந்தவர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கவும், வியாதியினாலாவது, கிழத்தனத்தினாலாவது வேலைசெய்ய முடியாவிட்டால் தாராளமாய் பென்ஷன் கொடுக்கவும் வேண்டிய ஏற்பாடுகளை செய்யமுயன்றார்.

புதிதாய் வருகிற ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ரிவினியு இலாகாவில்தான் முதல் முதல்வேலைக்கு ஆரம்பிக்கவேண்டுமென்பதும், அப்பொழுதுதான் அவர்கள் ஜனங்களுடன் நன்றாய் பழகி நடை உடை பாவனைகளைத் தெரிந்து அவர்களிடத்தில் விசுவாசமாய் இருப்பார்களென்பதும் அவர் அபிப்பிராயம். அதற்காகவே மேற்படி உத்தியோகஸ்தர்கள் திராவிட பாஷைகளில் நல்ல பயிற்சியடைய வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இவருக்கு இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள், ஆனால் குழந்தைகளிடத்தில் கொஞ்சிக்குலாவி ஆநந்திக்காமல் அவர்களைவிட்டு பிரிந்திருக்க நேர்ந்தது. பிறகு தன் மனைவி உடம்பு அசௌக்கியமாயிருந்ததனால் அவளை ஊருக்கு அனுப்பி தான் மட்டும் தனியேயிருந்தார். வேலையை இரண்டுதரம் ராஜீனாமா கொடுத்தார். முதல் தடவையில் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. இரண்டாம் தடவையில் இவருக்கு பதிலாக இன்னொருவர் வருவதற்கு தவக்கப்பட்டது. இந்த ராஜதானியினுடைய ஒவ்வொரு இடத்தையும் தான் நன்றாய் தெரிந்துகொள்ளும் பொருட்டு நெடுநாளைக்கு உட்புறங்களுக்கு ஸர்கூட்போனார். தான் முந்தி கலெக்டராகவிருந்த பிராமஹால், பெல்லாரி, இந்த இடங்

களின் சுகத்தை நன்றாய் அனுபவித்தார். ஆனால், அவருக்கு விசேஷ அபிமானமுள்ள ஜனங்களுக்கு தாய் தகப்பன் போன்ற இவர், ஜனங்களுக்கு நன்மை செய்துகொண்டிருக்கையிலேயே, அந்த ஜனங்களுக்கு மத்தியில், 1827-ஆ ஜூலை 4உ நிடுக்கென்று "கால்ரா"வினால் மரணமடைந்தார். மறுநாட்காலையில் "குத்தி" (Gooty) யில் அவர் அடக்கம் செய்யப்பெற்றார். "ஸர் தாமஸ்மன்ரோ" வைப்போல் குடிகளிடத்தில் விசுவாசமுள்ளவரும் அவர்களுக்காக பாடுபட்டவரும் அவர்களுக்கு நன்மை செய்யவேண்டியதுதான் தன் கடமை யென்று தெரிந்து நடந்தவரும் வேறுயாருமில்லை. அவருடைய முக்கியமான எண்ணம் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கும், ஹிந்துக்களுக்கும் யாதொருவித்தியாசமில்லாமல் இரண்டு பேர்களுடைய நன்மையையே யெப்போதும் சரியாய் கவனித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே. அவரிருந்த தெய்வபக்தியுள்ளவரென்றும், கடவுளைதினமும் தியானிக்க வேண்டுமென்று உறுதியாய் நடத்தி வந்தாரென்றும் தெரிகிறது. "குடிகளின் நேசர்" என்று சொல்லும்படியான கௌரவமான பட்டத்தை வகிக்கக்கூடியவர் "ஸர் தாமஸ் மன்ரோ" வைவிட வேறுயாருமில்லையென்று சொல்லும்படியாக தென்னிந்தியாவிலுள்ள குடிகளுக்கு அவ்வளவு உபகாரம் அவர் செய்திருக்கிறார். இவரைப்போல நமக்கு நன்மை புரிந்தவர் அக்காலத்தில் கிடையாது. இவருடைய குணத்தையும் நலத்தையும் அவர் ஜனங்களிடம் கொண்ட விசுவாசமும் சென்னை மலைச்சாலை (Mount Road) யில் அவர் க்ஞாபகார்த்தமாக ஜனங்களாலியற்றப்பட்டிருக்கிற சிற்ப உருவமே சாட்சியாக இருக்கிறது. அதைக் கண்டபொழுதெல்லாம் நமது நேசன் என்ற க்ஞாபகம் நமது மனதைக்கவர்ந்து ஆனந்தமளிக்கிறது.

S. V. ஸ்ரீனிவாஸய்யர், B. A.

## திவான் பஹதூர் ஆர். இரகுநாதராவ் ஸி. எஸ். ஐ. அவர்களுடைய சில அபிப்பிராயங்கள்

## A FEW THOUGHTS BY DEWAN BAHADUR R. RAGHUNATHA RAO C.S.I.

விவசாயமும், கைத்தொழில்களும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரிக்கக்கூடாத ஸம்பந்தத்தையுடைய தாயிருக்கின்றன. ஒன்றை விருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட எவ்வித முயற்சியிலும் மற்றொன்றைப்பற்றிக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது.

இந்தியா ஒருபெரிய தஞ்சமுள்ள தேசமாயிருக்கிறது. இந்தியாவில் உண்டாக்கக்கூடாத தாயும் உபயோகமுள்ளதாயுமுள்ள ஸாமான்களின் ஸங்கியை வெகு குறைந்தது. இந்தியாவின் விசாலமான பரப்பில் எல்லாவித சீதோஷ்ண ஸ்திதியும், பூமியும் அடங்கியிருக்கிறது.

இந்தியாவில் முதல்தரமான ஸாமான்கள் உண்டுபண்ணக் கூடுமென்பதற்கு ஏராளமான திருஷ்டாந்தங்களிருக்கின்றன. 'முதல்' வேண்டியதவசியம் இது ஒரு மனிதனிடத்திலேயே கிடைக்கக்கூடியதன்று. இதற்கு ஒற்றுமை வேண்டும். இந்த ஒற்றுமை ஒருவருக்கு இன்னொருவரிடத்திலிருக்கப்பட்ட நம்பிக்கையைச்சார்ந்தது. ஆனால் இதுதான் இந்தியாவில் கிடையாது. இக்குறையை நீக்கவேண்டியதவசியம். ஆனால் இக்குறையை நீக்க வெகுநாள் செல்லும். வித்தியாப்பியாஸத்தினால் இக்குறையைநீக்கவேண்டிய முயற்சி ஆரம்பிக்கப்படவேண்டும். இவ்விதமான நம்பிக்கை உண்டாக்கும் பொருட்டு அவசியமான மதவித்தியாப்பியாஸமோ அல்லது நீதி போதிக்கத்தக்க வித்தியாப்பியாஸமோ ரொம்பகுறைவாயிருக்கிறது. இது உண்டாக்கவேண்டுமானால் முதலில் வித்தியாசாலைகளில் ஏந்தெந்தச்சாலைகளில் மதவித்

தியாப்பியாஸமோ, அல்லது நீதிபோதனையோ அல்லது எவ்விடத்தில் விவசாயம், ரஸாயன சாஸ்திரம், கைத்தொழில்கள் இவைகளின் மூலாதாரஸாரங்கள் கற்பிக்கப்படவில்லையோ அவைகளுக்கு பொதுவான நிதி முதலானதுகளிலிருந்து எவ்வித உதவியும் கொடுக்கப்படக் கூடாது.

2. கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு சாஸ்திரங்களின் ஞானம் வேண்டியதவசியம். வியாபாரவிருத்திக்கு விவசாயத்திலிருந்து ஏராளமான சாமான்கள் உண்டுபண்ணப்படவேண்டும். விவசாயதொழிலாளிகளுக்கு சாஸ்திர ஞானம் இருந்தே தீரவேண்டும். ஒவ்வொரு வித்தியாசாலைகளிலும் விவசாயம், முதலானதுகளைப்பற்றி நேரில்காட்டப்பட்ட திருஷ்டாந்தத்துடன் கற்பிக்கப்படவேண்டும்.

3. மனிதனுக்கு உணவுவேண்டும். பிறகு உடுப்பு; அதற்குப் பிறகு பெரும்போக்கான நிலைமைக்குறிய வஸ்துக்கள். வியவசாயம் உணவையும், உடைக்குறிய பருத்தியையும் கொடுக்கிறது. மல்பெரி, (Mulbury) விருக்ஷம் பழங்களையும் பட்டுக்குவேண்டிய வஸ்துக்களையும் தரக்கூடியதாயிருக்கிறது. பழவிருக்ஷங்கள் பழங்களைத் தருவதோடுங்கூட அடுப்புக்கு வேண்டிய விறகுகளையும், வீடு முதலானது கட்டுவதற்கு வேண்டிய மரத்தையும் தருகின்றன. விதைகள் எண்ணெயைத்தருகின்றன. ஆகையால் ஒவ்வொன்றும் விவசாயம், தோட்டவேலை, செடி கொடி பயிர்ச்சி முதலானதுகளிலிருந்து உண்டாகிறது. நமக்குவேண்டிய ஸாமான்களுக்கு அதிகம் நம்மிடமிருக்கிறது. இவைகளிலிருந்து, கொஞ்சம் சாஸ்திர ஞானத்துடன் நமக்கு வேண்டியதெல்லாவற்றையும் உண்டாக்கிக்கொள்ளலாம். இதோடுங் கூடமைந்த தேசங்களுடன் பணத்துக்கு பரிவர்த்தனையும் செய்துகொள்ளக்கூடிய ஸாமான்களையும் உண்டாக்கிக்கொள்ளலாம்.

4. சில பொது நிதிகளிலிருந்து கல்விக்காக பணத்தை சாஸ்திரோக்தமான ஞானத்தை உண்டுபண்ணும்பொருட்டு செலவழிக்கலாம். இது கிராமத்து பிரைமெரிப் பள்ளிக்கூடம்முதல் ஸர்வகலாசாலைவரைக்கும் கொடுக்கப்படவேண்டும் நமக்குவேண்டியது தண்ணீர்; இது சுலபமாய் கிடைக்கக்கூடியவழி, வியாபாரத்துக்கு வேண்டியஸாமான் செய்வதற்குபயோகமுள்ள கருவிகள், இவைதான் தற்காலத்தில்கூலி அதிகமாய் ஏறிக்கொண்டுவரும்போது, கிராக்கியாய்க்கொண்டுவரும் நம்முடையஸாதாரண ஏத்தமானது இன்னமும் வேறு எந்த கருவியிலாவது வழங்கக் கூடாததாய் செய்யப்படவில்லை. பிருமாண்டமான என்ஜெய் யந்திரங்கள் ஏழைக்குடியானவனுக்கு பெரிய வெள்ளை யானையைப்போலிருக்கின்றன. லகுவான விலைக்குக்கிடைக்கக்கூடியயந்திரங்கள் இன்னும் உண்டாக்கப்படவில்லை. இது விஷயத்தில்கவர்ன்மெண்டார் எவ்வளவு முயற்சியெடுத்தாலும் தகும். வித்திலிருந்து எண்ணை எடுக்க லகுவிலைகளுள்ள யந்திரங்கள் உபயோகப்படுத்திக்கொண்டு வரப்படவில்லை. நெசவை அபிவிர்த்திக்கு கொண்டுவர தற்காலம் அநேக உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸாதாரணமாய்கொஞ்சபணமுள்ளவர்கள் இந்தொழிலை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் உதவியுடன் இத்தொழில் விருத்திக்கு வந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே கவர்ன்மெண்டார் இந்தியாவிலிருக்கிற கைத்தொழிலை விருத்திக்குக்கொண்டுவரும் விஷயத்தில் ஆவலோடிருக்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் கீழ் இருப்பவர்கள் சிரத்தையுடன் கவர்ன்மெண்டாருக்கு உதவிபுரிவதில்லை.

5. கவர்ன்மெண்டு நிலவரி நீர்வரி இவைகள் கைத்தொழில்களுக்கு ஒரு தடையாயிருக்கிறதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்; இது வாஸ்தவந்தான்.

6. அநேக தேசங்கள் பழக்கைத்தொழில்களால் செல்வமுடையதாயிருக்கின்றன. இவ்விடத்தில் இக்கைத்தொழில் விருத்திக்குவர முடியவில்லை. ஒரு நிலத்தில் பழ விருக்ஷங்களி

ருக்குமேயாகில் நிலத்தைத் தீர்வைக்குள்ளாக்காமல் ஒவ்வொரு மரத்திற்கு இவ்வளவு தீர்வையென்று குறிக்கப்படுகிறது. ரெயில்வே பரவிக்கொண்டு வருவதினால் வாழைமரக் கைத்தொழில் விருத்தியாய்க்கொண்டு வருகிறதென்று தெரிந்துகொண்டு வாழைப்பயிர் தொழிலுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வகையான கைத்தொழில்களுக்குத் தடையாயிருக்கும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும். கவர்ன்மெண்டாருக்கு இது தெரியவரும் பக்ஷத்தில் இது நிறுத்தப்படுமென்பதற்கு ஸந்தேகமில்லை.

7. மேற்கு பக்கமுள்ள தேசங்களிலும் இலங்கையிலும் உபயோகமுள்ளதென்று கூறப்படும் பள்ளிக்கூடத்தோட்டங்கள் இவ்விடங்களிலும் வழக்கத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும். பழத்தோட்டங்கள் உண்டுபண்ணுவதற்கும், ஸரியான நிலைமையில் வைத்துக்கொள்வதற்கும் உதவிவேண்டியதவசியம்.

8. விவசாயத்தையும் கைத்தொழில்களையும் அபிவிருத்திக்குக் கொண்டுவரவேணுமானால் கிராமங்களில் வேண்டியவர்களாவன:—

| | |
|---|---|
| 1. தச்சன் | 10. தட்டான் |
| 2. கொல்லன் (கருமான்) | 11. நெசவுகாரன் (சேணியன்) |
| 3. குயவன் | 12. கணக்குப்பிள்ளை |
| 4. சக்கிலியன் | 13. கிராமத் தலைவன் |
| 5. வண்ணான் | 14. ஒட்டர் (உப்பரவன்) |
| 6 ஜோசியன் அல்லது உபாத்தியாயர் | 15. கொரவர் |
| 7. அளவுக்காரன் | 16. வைத்தியன் |
| 8. வாணியன் | 17. தண்ணீர் பாகித்துக் கொடுப்பவன் |
| 9. கடைக்காரன் (வியாபாரி) | |

9. கிராமத்தில், கிராமச்சங்கத்தினால் போஷிக்கப்பட்டும், அதன் மேல் பார்வையிலுமிருக்கப்பட்ட கிராமப்பள்ளிக்கூடம் வேண்டும். உபாத்தியாயரும் இச்சங்கத்தினால் நியமிக்கப்படவேண்டும். அவர் பிள்ளைகளுக்கு ஜன்மபாஷை, ஸம்ஸ்கிருதம், வாசிப்பு, எழுத்து, கணக்கு இவைகளை கற்றுக் கொடுக்கவேண்டும். இப்பள்ளிக்கூடம் வருஷத்துக் கொருமுறை கவர்ன்மெண்டு இனிஸ்பெக்டரால் பரீக்ஷித்துப் பார்க்கப் படலாம். உபாத்தியாயர் செவ்வையாய் கற்பித்ததாக தெரியும் பக்ஷத்தில் அவருக்கு உடை, பணம் முதலான பரிசுகள் கொடுக்கப்படலாம். இவ்விதமுள்ள பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டாருக்குச் சிலவன்னியில் பள்ளிக்கூடங்கள் யேற்படுவதுடன், உபாத்தியாயருடைய திறமைக்குத் தகுந்தபடி, விவசாயம் கைத்தொழில் இவைகளின் அபிவிருத்திக்கு உதவியும் புரியலாம்.

10. கிராமசங்கங்கள், இவைகளுக்கு திரவிய உதவிபுரிய முடியாமலிருக்கும் விஷயங்களில் கவர்ன்மெண்டாருடைய உதவியை எதிர்பார்க்கலாம். கவர்ன்மெண்டார் யுக்தப்பிரகாரம் உதவியும் புரியலாம்.

11. ஆனால் இவ்விதமான உபாத்தியாயர்கள் தற்காலம் கிடைப்பதரிதென்பது தெரிந்தவிஷயம். ஆனால் தற்காலம் நல்ல நிலைமைக்குக்கொண்டுவரப்பட்டிருக்கும் சங்கத்தினுடைய கையில் விட்டுவிட்டால் இவ்வித உபாத்தியாயர்கள் கிடைப்பார்களென்பது நிச்சயம். கவர்ன்மெண்டார் எவ்வளவு முயற்சியெடுத்துக்கொண்டபோதிலும் தற்கால நிலைமைக்குத் தகுந்தபடி பிரைமெரிவித்யாப்யாஸம் உபயோகமுள்ளதாயிருக்குமென்பது ஸந்தேகம். ஏனென்றால் பொது நிதியிலிருந்து பணம் ஏராள்மாய் சிலவழிக்கவேண்டியிருக்கும், அது லகுவில் முடியுமென்பதும் ஸந்தேகந்தான். இதற்காக புதிதான வரிபோடுவது நல்லதன்று. கிராம ஆளுகையை கிராமத்தாருக்கே கொடுத்துவிட்டால் சிலவன்னியில் பிரைமெரிவித்யாப்பியாசம் கவர்ன்மெண்டாருக்கு அதிகமோ அல்லது கொஞ்சங்கூட சிலவன்னியிலேயோ ஏற்படுத்தப்பட

லாம்; மேலும் மேற்கூறிய கூலியாள்களுக்கும் சிறிய வேலைக்காரர்களுக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டால், விவசாயத்திற்கு ஒரு க்ஷேமமும் தற்காலம் நல்ல வழியோடு இல்லாமலிருந்த போதிலும் நடவடிக்கையி லிருக்கும் கைத்தொழில்களுக்கு ஒரு உதவியுமாய் இருக்கும்.

12. கிராமத்தில் பயிரிடுவோர்களாலும், கைத்தொழில்காரர்களாலும் உண்டு பண்ணப்பட்ட ஸாமான்களை கலெக்டர் வரும்பொழுது கிராமத்திலேயோ அல்லது அதனருகிலோ கொஞ்சம் செலவுடன் வைக்கப்பட்ட காட்சிவைத்து, முதல் தரமான ஸாமான்களுக்கு, சகாயமாய் கிடைக்கும் வஸ்திரம் நகைகள் முதலான பரிசுகள் அளித்தால், கைத்தொழில்கள் புதிதாயும் க்ஷீண திசையையடைந்த கைத்தொழில்கள் அபிவிருத்திக்கும் வரும்.

13. தற்காலம் செய்யப்படுவதில் குற்றம் இரண்டுண்டு. இபற்கையில்லாம லிருப்பதும் அதிக திரவ்யநஷ்டமும்தான். சிறு தேசங்களுக்கு இவ்வழிகூடாது. பிரதான நகரில் வருஷத்துக்கொருமுறை காட்சிகள் வைக்கப்படலாம். சிறு கிராமங்களின் சமீபத்தில் ஒரு காசுகூட செலவன்னியில் சந்தைகள் வைக்கப் படலாம். இவைகள் ஸாதாரண ஜனங்களுக்கு தெரிந்த விஷயம். அவர்களுக்கு வேண்டிய தென்னவென்றால் மேல்பார்வை, கெடுதியற்ற ஒழுங்கு, களங்கமற்ற அநுதாபம் இவைதான். மேல்பார்வையும், எந்தக்கிராமத்தில் இச்சந்தை கூட்டப்படுகிறதோ அக்கிராமத்தலைவர்களினால்தான் செய்யப்படவேண்டும்.

14. பின்வரும் ஆதாரங்களைக்கொண்டு ஒருதந்திரம் செய்யலாம் :—(1) சிற்பிகளுக்கு தேவையான உணவு, அவர்களுக்கு கடன்முதலானது வாங்காமல் கிடைக்கக்கூடியதாய் செய்யப்படவேண்டும். (2) அவரவர்களுக்கு அவரவர் தொழில்களில் கவர்ன்மெண்டு வேலைக்காரர்களின் தொந்திரவன்னியில் சிறிது திரவியம் செலவிட்டு, வித்தியாப்பியாஸம் கொடுக்க வேண்டும். (3) ஜில்லாத்தலைவர் மூலமாய் திறமையுள்ள சிற்பிகளுக்கு, யோக்கியதாபத்திரம், பணம் முதலான பரிசுகள் ஒவ்வொரு காலங்களில் கொடுக்கப்படவேண்டும். (4) அவர்கள் தேற்றத்தை அதிகாரமன்னியில் தெரிந்துகொண்டு அவர்களின் வாஸ்தவநிலைமையை கவர்ன்மெண்டாருடைய அறிக்கைக்காக தெரிவிக்கவேண்டும். (5) கிராமஸ்தர்களுக்கு அவர்களுக்கு கிடைக்கக்கூடாத வஸ்துக்களை அதாவது நல்ல வித்து, நல்லபருத்தி, பட்டு, மரம், யந்திரங்கள் இவைகளை கொடுத்து உதவவேண்டும். இவைகளின் கிரயத்தை வாங்குகிறவர்களிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம். (6) கிராமஸ்தர்களை ஒருபொழுதும் பெரிய உத்தியோகஸ்தர்களின்முன்பு அவர்கள் வேறுஊரிலிருக்கும்பொழுது போகவேண்டுமென்று சட்டப்படிக்காவது, அல்லது அவர்களினிஷ்டத்திலாவது கட்டாயப்படுத்தக்கூடாது. (7) கிராமஸ்தர்களை அடிக்கடி வாங்கப்பட்ட சிறு வரிகளால் சிரமப்படுத்தக்கூடாது. ஏனென்றால் இதனால் அவர்களின் நேரமெல்லாம் வரி கட்டுவதிலேயே செலவழிந்து தொழில்களைச் செய்ய ஸாவகாசமில்லாமல் போய்விடும். (8) பொது நிதியிலிருந்து பணத்தை அகாரணமாயாவது அல்லது கிராமத்தார்களுக்குத் தெரியாத விஷயத்திலாவது அல்லது அவருக்கு உபயோகப்படாதவஸ்துக்களிலாவது செலவழிக்கக்கூடாது. (9) கிராமத்தார்களுக்கு அவர்களுக்கு தற்காலம் கிடைக்கக்கூடாதவைகளை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். அதாவது, உபாத்தியாயர்கள், யந்திரங்கள், யந்திரத்தை ஓட்டும் வேலைக்காரர்கள் இவர்களை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். (10) ஒவ்வொரு பள்ளிக்

கூடத்திலும், யந்திரம் ஜலதத்துவசாஸ்திரம், ரஸாயனம் முதலானதுகளைப்பற்றி சிறிதுகற்றுக் கொடுக்கப்படவேண்டும். (11) இலங்கை முதலிய தேசங்களிலிருப்பதுபோல ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தோட்டங்கள் இருக்க வேண்டும். சாஸ்திரோக்தமான சங்கங்கள் ஒவ்வொரு ஜில்லாவின் பிரதானநகர்களில் ஏற்படுத்தப்படவேண்டும்.

15. இதைவிட ஜாஸ்தியாய் பொதுநிதிகளைப்பற்றி பேசுவது பிரயோஜனமில்லை அதுவும் இந்தியாவில் கேட்கவேண்டியதில்லை. கவர்ன்மெண்டார் திறமையைக் கைவிடாமல், இந்தியாவிலேயே உண்டுபண்ணப்பட்ட வஸ்துக்கள் விஷயத்தில் சிறிது பக்ஷபாதமாயிருக்கலாம்.

16. பொதுப்பணத்தின்உதவியால்ஒவ்வொரு ராஜதானியிலும் ஒரு விவசாய கலாசாலையும் ஒவ்வொரு கைத்தொழிலின் சாஸ்திரார்த்தமுள்ள வித்தையை கற்பிக்கக்கூடிய கலாசாலையும்ஏற்படுத்தப் படவேண்டும். இப்பள்ளிக்கூடங்களிலிருந்து தேறிவரும் மாணாக்கர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும். தேறாதவர்களுக்கு தேறினவர்களிருக்கும்பொழுது வேலை கொடுக்கப்படக்கூடாது.

17. இந்தியா ஜனநெருக்கமுள்ளது. ஆனால் இவர்களில் அநேகர்கள் ஏழைகள்தான். அவர்கள்புத்திகூர்மை யுடையவர்கள்தான் முடியுமானால், யுக்திகளைத்தங்களே எடுத்துக்கொண்டு வேலைசெய்வார்கள் ஐரோப்பியர்களின் பழக்கம், உபயோக முள்ளதாயிருந்தபோதிலும் இந்தியாவிலிருக்கும் இந்தியர்களுக்குஅவ்வளவு லாபத்தைக்கொடுக்கத்தக்கதல்ல. எல்லாமுயற்சியும், உபயோகமுள்ள வேலைகளும் கிராமங்களில் ஆரம்பிக்கப் படவேண்டும். கிராமச்சங்கத்தாரால், நடத்தப்படவேண்டும். உத்தியோகஸ்தரால் அதிகத்தொந்தரை இருக்கக்கூடாது.

18. கிராமச்சங்கத்தை மறுபடியும் பிழைப்பித்து நல்ல ஸ்திதிக்கு கொண்டுவந்தால் கவர்ன்மெண்டாரின் வேலைலகுவாயும், நல்ல உபயோகமுள்ளதாயுமிருக்கும்.

## சட்டம் ஏற்படுத்துவோர் சட்டபடி நடத்தல்வேண்டும்

### LAW GIVERS SHOULD NOT BREAK THE LAWS THEY MAKE

சங்கரென்றும் லிகிதரென்றும் இரண்டு ரிஷிகளிருந்தார்கள். அவர்கள் இரண்டுபேரும் ஸ்மிருதிகளை எழுதினார்கள். அவர்களுடைய ஆசிரமத்தில், அதாவது வாஸஞ்செய்யுமிடத்தில், ஒரு தோட்டமுண்டு. அது அவ்விருவருக்கும் பொதுவாய் பாத்தியப்பட்டது. ஓர் ஸமயம் சங்கரரில்லாத காலம் பார்த்து, அவருடைய கனிஷ்ட ஸகோதரரான லிகிதர் அத்தோட்டத்தின்கண்ணே யிருந்த ஓர் மரத்திலிருந்து ஓர் பழத்தைப் பறித்துத் தின்றுவிட்டார். இந்த ஸமாசாரம் சங்கரருக்குத் தெரிந்தவுடனே, அவர் பழத்தைத் தொடுமுன், கூட்டுப்பங்காளியான தம்முடைய ஸம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும். அப்படிச் செய்ததால், மேற்கண்டசெய்கை சட்டவிரோதமென்று லிகிதருக்குச் சொன்னார். லிகிதரே ஸ்மிருதியெழுதியவராகையால் சட்டவிரோதமாய் நடத்தப் பிரியப்படவில்லை. ஆனதால் தான் வஸிக்கும் இராஜ்யத்தின் அரசனிடம் சென்று, ஸாதாரணமாய்த் தான் செய்த குற்றத்தைத் தெரியப்படுத்தி, அதற்கு தண்டனை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆரியர்களுக்குத் தர்ம சாஸ்திரம் ஏற்படுத்தின மனுவின் ஸ்மிருதியை அவ்வரசன் பார்வையிட்டு பிறருடைய ஸொத்தை அபகரிக்கிறவர்களுக்கு அதில் கண்டிருக்கிற கொடூர சிக்ஷையை, அதாவது இரண்டு புஜங்களையும் சேதித்துவிடுதல் என்ற சிக்ஷையை விதித்தான். எல்லோரும் லிகிதருடைய மனசாட்சியையும் புகழ்ந்தார்கள். தெய்வகிருபையினாலே அவருக்கு இரண்டு புஜங்களும் மறுபடியும் கிடைத்தன.

பிறருடைய பொருளை அக்கிரமமாக எடுத்து உபயோகிப்பது யுக்தமல்ல. ஓர் தப்பிதத்தைச் செய்துவிட்டால், அதை மறைக்கிறதைக்காட்டிலும் ஒத்துக்கொள்வது நலம். ஏனெனில் ஒத்துக்கொள்வது பாதிபரிகாரமாயும், மறைப்பது இரட்டிப்புக் குற்றமாயும் ஆகிறது.

# சிவத்தலப்பெயர்க் காரணவிளக்கம்

## SIVA STALAS THE REASEONS FOR THEIR NAMES

மெய்ஞ்ஞானியர்களாகிய பெரியோர் மூவர் யாவர்க்கும் மேலாகிய பரம்பொருளாகும் பரசிவத்தின் பெருமையைச் செவ்விய செய்யுள் ரூபமாகும் தோத்திரவகையாற் பாராட்டியுள்ளார். அத்தோத்திரப் பாமாலையே தேவாரம் என்பது. தேவனாகிய பரசிவத்துக்கு ஆரம் போல்விளங்குவதாதலின் தேவாரம் என்னும் பெயர் அத்தோத்திரப் பாமாலைக்கு எய்தியது. தேவாரம் பாடிய பெரியோர் மூவர் என்று சொன்னோம். அவர் அப்பர், சம்பந்தர், ஸுந்தரர் என்னுந்திருநாமம் வாய்ந்தவர். அவர்கள் சிவஸ்தலங்கள் தோறும் சென்று அங்கங்கு வீற்றிருக்கும் சிவபெருமான் மீது திருப்பதிகங்கள் பாடும் நியமம் பூண்டவர்கள். பலவித அற்புதச் செயல்களும்செய்துகாட்டியுள்ளவர்கள். அவர்கள் சரித்திரம் 'பெரியபுராணம்' என்னும் நூலகத்துக் காணப்படும். தேவாரப் பதிகங்கள் எழுதப்பட்டிருந்த ஓலைப்புத்தகங்கள் செல்லேறிச் சிதைவுபட்டமையால் அருமையான பல பதிகங்கள் இறந்துபட்டன. எனவே, பலதலங்கள் தேவாரப் பதிகம் உற்ற தலங்கள் 274. தேவாரப்பதிகங்களின் தொகை 7:7. இத்தலங்களின் பெயர்க்காரணத்தை ஆராயுமிடத்து உயர்திணைப்பகுதியைச் சார்ந்த தேவர் முதலியோரே அன்றி, அஃறிணைச் சிற்றுயிர்களாம் ஈ, எறும்பு முதலியனவும் பரசிவத்தைப்பூசித்து முத்தியடைந்தன என்னும் விஷயம் தெளிவுற விளங்குகின்றது.

| | பூசித்துப் பேறு பெற்றவரும் பெற்றவையும். | ஸ்தலப்பெயர். | ஸ்தல விசேஷம். |
|---|---|---|---|
| 1. | கணபதி | கணபதீச்சுரம் (திருச்செங்காட்டாங்குடி.) | கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு, கணபதி பரமசிவனைப் பூசித்த ஸ்தலம். |
| 2. | முருகபிரான் | கீழ்வேளூர், புள்ளிருக்குவேளூர், சேய்கிழயார், திருமுருகன் வேண்டி. | புள்ளிருக்கு வேளூர் என்பது வைத்தீசுரன் கோயில். சூரசம்ஹாரம் செய்ய வழிநடக்கும் சேய், பாசறைக்கு நல்ல இடமெனத் தங்கித் தந்தையைப் பூசித்த, ஊர் சேய் நல் ஊர். |
| 3. | பார்வதி | கச்சி, கேதாரம், சத்திமுத்தம், மயிலாடுதுறை, மயிலாப்பூர். | சத்தி சிவத்துக்கு முத்தந்தந்த ஸ்தலம் சத்திமுத்தம். மயில் வடிவமேற்றுப் பார்ப்பதி பூசித்த தலங்கள் மயிலாடுதுறை (மாயூரம்), மயிலாப்பூர். |
| 4. | வைரவர் | வடுகூர். | வடுகனாகிய வைரவர் பூசித்த ஸ்தலம். |
| 5. | திருமால் | திருமாற்பேறு, சக்கரப்பள்ளி, தலைச்சங்காடு, வலம்புரம், மாணிகுழி. | (i) திருமால் பூசித்துச் சக்கரம்பெற்ற ஸ்தலங்கள்:—திருமாற்பேறு, சக்கரப்பள்ளி.<br>(ii) சங்கம்பெற்ற ஸ்தலங்கள்.—தலைச்சங்காடு, வலம்புரம்.<br>(iii) மாணிவடிவாக (வாமன அவதாரம்) இருந்தபோது பூசித்த ஸ்தலம்—மாணிகுழி. |
| 6. | இலக்குமி | திருவாரூர் (கமலை), திருநின்றியூர் | அழியாத திருமங்கலியம்பெற இலக்குமி பூசித்த ஸ்தலம் திருவாரூர். |
| 7. | பிரமன் | பிரமபுரம், கஞ்சனூர், காஞ்சி. | பிரமபுரம் என்பது சீகாழி. |

| | பூசித்துப் பேறு பெற்றவரும், பெற்றவையும். | ஸ்தலப்பெயர். | ஸ்தல விசேஷம். |
|---|---|---|---|
| 8. | இந்திரன் | இந்திரநீல பருப்பதம், கண்ணூர்கோயில். | "இந்திரன் தொழுநீலபர்ப்பதம்" என்பது தேவாரம். தேவேந்திரன் சாபம் நீங்கப் பெற்று ஆயிரங்கண் பெற்ற ஸ்தலம் 'கண்ணூர்கோயில்.' |
| 9. | சூரியன் | பரிதிநியமம். | பரிதி (சூரியன்), நியமம் (கோயில்). சூரியன் பூசித்த ஆலயம். |
| 10. | அக்கினி | கொள்ளிக்காடு, வன்னியூர். | வன்னி-அக்கினி. |
| 11. | யமன் | தருமபுரம். | தருமன்-யமன். |
| 12. | காளி | காழி, அம்பர்மாகாளம். | "நங், காளியேத்து மழகளூர்" என்பது அம்பர் மாகாளத்துத் தேவாரம். |
| 13. | மாகாளர் | இரும்பை மாகாளம். | |
| 14. | தேய்வகன்னியர் | பட்டீச்சுரம், பெண்ணாகடம். | காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் பட்டி என்பவள் பூசித்தபடியாற் பட்டீச்சுரம் என்னும் பெயர்வந்தது. பெண் + ஆ + கடம்: பெண்-தேவகன்னியர். |
| 15. | வேதம் | புள்ளிருக்குவேளூர், மறைக்காடு, வேதிகுடி. | இருக்கு = வேதம். மறை-வேதம். |
| 16. | அகத்தியர் | அகத்தியான்பள்ளி. | |
| 17. | மகாகாளருஷி | அம்பர் மாகாளம். | |
| 18. | வால்மீகர் | திருவான்மியூர். | |
| 19. | வியாக்ரபாதருஷி புலி உருவமுள்ளவர் | பெரும்பற்றப்புலியூர், திருப்பாதிரிப்புலியூர், ஓமாம்புலியூர், எருக்கத்தம்புலியூர், பெரும்புலியூர். | பெரும்பற்றப்புலியூர் என்பது சிதம்பரம். |
| 20. | பதஞ்சலி ஆதிசேஷன் பாம்புருவமுள்ளவர் | திருநாகேச்சுரம். நாகபட்டினம், கும்பகோணம் * நாகேசுரஸ்வாமி கோயில், திருப்பாம்புபுரம். | * திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது இதுவே. |
| 21. | பிருகுமுனிவர் | திரு ஆடானை. | சாபத்தால் ஆட்டுத்தலையும் ஆனேயின் உடலும் அடைந்த பிருகு முனிவர் பூசைசெய்து சாபம் நீங்கப்பெற்றார். |
| 22. | அசுரர். | * இடும்பாவனம். ஓணகாந்தன்தளி திரிசிராப்பள்ளி, † திருவக்கரை. †† வெஞ்சமாக்கூடல் | * இடும்பன் பூசித்த ஸ்தலம். ஓணன் காந்தன் என்னும் 2 அசுரர்கள் பூசித்த ஸ்தலம். திரிசிரன் என்னும் அசுரன் பூசித்தஸ்தலம். † வக்கராசுரன் பூசித்த ஸ்தலம். †† வெஞ்சன் என்னும் அசுரன் பூசித்தஸ்தலம். |

| | பூசித்துப் பேறு பெற்றவரும் பெற்றவையும். | ஸ்தலப்பெயர். | ஸ்தல விசேஷம். |
|---|---|---|---|
| 23. | இராமர் | இராமனதீச்சுரம், * இராமேசுரம். | * ராவண ஸம்ஹார தோஷம் நீங்கப் பூசித்த ஸ்தலம். |
| 24. | விஜயன் | விஜயமங்கை. | 'பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து வேண்டு நல் வரங்கொள் விஜயமங்கை' என்பது அப்பர் தேவாரம். |
| 25. | நளன் | திருநள்ளாறு. | நளசக்ரவர்த்தி பூசித்துக் கலிதோஷம் நீங்கப் பெற்ற ஸ்தலம். "நளன் கெழுவிநாளும் வழிபாடுசெய் நள்ளாறே" (தேவாரம்) |
| 26. | ஆனை | திருஆனைக்கா, சீகாளத்தி, கோட்டாறு, பெண்ணாகடம், வெண்காடு. | |
| 27. | பசு | ஆமாத்தூர், ஆவூர், பெண்ணாகடம், கருவூர் ஆநிலை. | |
| 28. | குரங்கு | குரக்குக்கா, *குரங்கணின் முட்டம், தென் °° குரங்காடுதுறை, வட° குரங்காடு திறை. | * ஹநுமார் பூசித்த ஸ்தலம். ° குரங்கு=வாலீ °° குரங்கு=சுக்ரீவன் * குரங்கு=வாலி |
| 29. | கழுகு | * கழுக்குன்றம், * * புள்ளிருக்கு வேளூர். | * "கழுகுதொழு வேதகிரி" திருப்புகழ். * * சம்பாதி, சடாயு. "புள்ளினூர் பணி புள்ளிருக்கு வேளூர்' தேவாரம். |
| 30. | நாரை | நாரையூர். | |
| 31. | காகம் | குரங்கணின்முட்டம். | முட்டம்-காக்கை. |
| 32. | பாம்பு | காளத்தி, பாதாளீச்சுரம். | காளம்-பாம்பு. * பாம்புருவுள்ள தனஞ்சயரிஷி பூசித்தஸ்தலம். |
| 33. | அணில் | குரங்கணின்முட்டம். | |
| 34. | சிலந்தி | சீகாளத்தி. | சீ-சிலந்தி. |
| 35. | ஈ | ஈங்கோய்மலை | அகத்திய முனிவர் ஈ ரூபமாகச்சென்று சுவாமியைத் தரிசித்த ஸ்தலம். |
| 36. | எறும்பு | எறும்பியூர். திருவெறும்பூர். | தேவர்கள் எறும்பு ரூபம் எடுத்துவந்து பூசித்த ஸ்தலம். |

முற்றும்.

வ. சு. சேங்கல்வராய பிள்ளை. M. A.

## முடிந்த தமிழ்நெடுங்கணக்கிற்காக ஓர் வேண்டுகோள்

## A PLEA FOR PERFECT ALPHABET IN TAMIL

---

ஓர் பாஷையானது நிலையாக இருந்து உலக அபிவிருத்திக்கு கருவியாக விருக்கவேண்டுமென்றும்; அப்படி யிருக்கவேண்டுமென்றால் காலாகாலங்களின் நடத்தைகளையும், ஸ்வபாவங்களையும், நோக்கங்களையும், எண்ணங்களையும், ஆசாரங்களையும் தன்னிடத்தில் அடைந்திருக்க வேண்டுமென்றும்; சரித்திர, சாஸ்திர, புத்தி, யுக்தி பரிசோதனைக்கு அந்தபாஷை ஸாதனமாக இருக்கவேண்டுமென்றும்; அப்படி செய்வதற்கு பாஷையிடங் கொடுக்கவேண்டுமென்றும்; அப்படி இடங்கொடுக்கவேண்டுமென்றால் அந்தபாஷை பக்குவமான பாஷையாக இருக்கவேண்டு மென்றும்; பக்குவபாஷையாக இருக்கவேண்டுமென்றால் ஒவ்வொரு சப்தத்திற்கும் தனியாக ஒவ்வொரு எழுத்து குறியீடாக வேண்டுமென்றும் நாம் முன் சொன்னோம்.

இந்தவழியாக பார்த்தபொழுது தமிழ் பக்குவமான பாஷையாகக்கொள்வதற்கு ஒவ்வொரு சப்தத்திற்கும் தனியெழுத்தில்லாமல் இருக்கின்றதை நாம் காலானுக்கிரமத்திற்கேற்க அதனுடைய எழுத்துக்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும் முன் கூறினோம். அவ்வாறு செய்வதற்கு நம் ஸகோதர்களெல்லாம் முயற்சி செய்து தமிழைப் புராதனத்தில் எவ்வாறு பெருமையடைந்து இருந்ததோ அதேமாதிரியாக இப்பொழுது மிருக்கும்படிச்செய்யவேண்டும். அப்படிச்செய்ய நமது மனத்தில் தோன்றாவிட்டால் ஒன்று நாமாவது உயிரில்லாதவர்களாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தமிழாவது உயிரில்லாததாக இருக்கவேண்டும். நாம் உயிரற்றவரென்று சொல்லுவோமாயின் நமக்கு மனுஷத்தன்மையும் காலத்திற்கேற்ற மனோதைரியமும் இல்லாதவர்களாகிறோம். அல்லது, பூர்வம் பெரும்பாஷையாக இருந்த தமிழ் ஆனது இப்பொழுது உயிரற்றதென்று சொல்லும்பக்ஷத்தில் பின்பு வந்த தமிழர்களெல்லாம் மூளையில்லாதவர்களென்றும் தமது தேசபாஷைவிருத்தியில் அபிமானமில்லாதவரென்றும் நிஸ்சயமாகிவிடுகின்றது, எப்படிஇருப்பினு நமது ஆண்மைக்கே குறைவு உண்டாகிறது. இந்தக்குறையைத்தீர்ப்பதே மனுஷனாகப் பிறந்தவனுடைய கௌரவமாகிறது. இதற்கு பாடுபடுபவன்தான் தாய்நாட்டிற்குத்தகுந்த மகனாகின்றான்.

பாஷைக்கிருக்கவேண்டிய எழுத்துக்களைப் பற்றி நாம் மிகவும்கவலைப்படவேண்டியதில்லை. மற்றைய திராவிடபாஷைகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளெல்லாம் தம்முடைய எழுத்துக்களை முன்பே சீர்திருத்திக் கொண்டுவிட்டன. தமிழ்மாத்திரம் தனியாக பிடிவாதம் பிடித்துக்கொண்டு நிற்கின்றது. பிடிவாதத்தினால் எப்பொழுதும் கெடுதியேதவிர நன்மையுண்டாகாது. அந்த பாஷைகளெவ்வாறு பாஷையெழுத்துக்களை சரிப்படுத்திக் கொண்டனவோ அதே மாதிரி நாமும் நமது தமிழ்பாஷையை சரிபடுத்திக் கொள்ளலாம் இதில் ஒரு கஷ்டமுமில்லை.

முன்னோர்களெல்லாம் வடமொழிப் பதங்களை பின்னப்படுத்தி தமிழில் சேர்த்துக்கொண்டார்கள். தமிழில் போதுமான எழுத்தில்லாமையால் தான் அவர்களிவ்வாறு செய்தார்கள். அதுவும்அல்லாமல் குருட்டு அபிமானமுங்கூட கலந்தது. ஸாதாரணமாகவே நம்முன்னோர்களுக்கு தாம்பிடித்தமுயலுக்கு மூன்றேகாலென்று சாதிக்கும் குணம்தான். அப்பேர்ப்பட்டவர்களுக்குக்கிந்த குருட்டு அபிமானம் சேர்ந்தால் அவர்கள் எவ்வாறு நடப்பார்கள் என்பது சொல்லவே வேண்டாம்.

சங்கத்தார் காலத்திருந்த வஸ்து நிர்த்தேசமும், குண நிர்த்தேசமும் போய் பாஷையின் உயிர்போய் உடல்மாத்திரம் நம்முன்னோர் கை

யிலகப்பட்டது. அதை இவர்கள் தங்கள் மனத்திற்குப்பட்டமாதிரியெல்லாம்மாட்டிக்கொண்டு இந்த காலத்தில் இருக்கும் அன்னியாய கதிக்கு கொண்டுவந்து விட்டார்கள். விட்டார்களே ஒழிய, அதை உயிர்ப்பிக்கத்தக்க வைத்தியமும் செய்யத் தெரியாதவராய் இருக்கின்றார்கள். செய்ய வருபவர்களையும் அசட்டைசெய்துவிடுகிறார்கள். இந்த விதமான அலக்ஷிய ஸ்வபாவம் நம் பண்டிதர்களுடைய மனதை விட்டொழிய செய்யவேண்டியது நமது முதல் வேலை. அவர்களுக்குமேல் நாட்டாருடைய விஷய ஸூசனை யுக்தியைக் கற்பித்து நித்தியா நித்தியங்களைக் காணும்படிச் செய்யவேண்டும். அவ்வாறு செய்து அவர்களை நம்முடைய கையிற் போட்டுக்கொண்டு நாம் செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டிய தவசியம். அவரிடத்து நம்முடைய பாஷையின் பொக்கிஷங்களிருக்கின்றன. அவர்களை நாம் அலக்ஷியம் செய்தால் முன்னோரது பாவங்களின்னவென்று நமக்குத் தெரியாது. அவை தெரிந்தாலொழிய நமது காரியமீடேறாது. அவர் வழியே போய்த்தான் அவர்களை நம் வழிக்குகொண்டுவரவேண்டியது. மாத்திரைக்கு வெல்லமிட்டு கொடுப்பதுபோல் நாமும் நமது பாவங்களை அவர் மனத்திலேற்றவேண்டியது; இது நமது தமிழ் பழைய பெருமையடைய செய்வதற்கு முதற்படி.

நாம் பண்டிதர்களை நம் வழிக்குள் கொண்டுவரவேண்டுமென்று சொன்னது ஸாதாரணமாக ஒருவரிடத்தும் பகைக்கொள்ளக்கூடாததென்ற எண்ணத்தினுடன்று. அவர்களை நம்வழிக்கு கொண்டு வரவேண்டிய தத்யாவஸ்யகம். பழைய நூல்களை யாதரித்து, அவற்றின் குணதோஷங்களை விவரித்து, இது நல்லது, இதுகெட்டது, என்று காட்டவல்லாரை நாம் அவசியம் நம்மிடத்துடையவராக இருக்கவேண்டியது. நாம் மிகவும் வேகமாக நமது உத்ஸாகத்தில் தலைகீழாய் ஓடிவிடலாம். அவ்வாறு நாம் உத்ஸாகத்தில் எல்லையைத்தாண்டி போகாமலிருக்க அப்பண்டிதர்கள் நம்மை பின்பற்றி யிழுப்பார்கள். இது நன்மையுண்டாவதற்கு அவசியமாக விருப்பதினுல்தான் நாமும் வேண்டுமென்றது.

வா. சேஷகிரி.

# இயற்கை அற்புதங்கள்

## WONDERS IN NATURE

---

### IX வானவில்

### THE RAIN BOW



வானவில் என்ற அற்புதத்தோற்றமானது ஸூர்யன் கிரணங்களால் உண்டாக்கப்படும் அற்புதத்தோற்றங்களுள் ஒன்று. இது எப்பொழுதும் ஸூர்யனுக்கு எதிரே காணப்படும். காலை அல்லது மாலைவேளைகளில் முறையே மேற்கு அல்லது கிழக்குப்புறம் மழைபெய்து கொண்டிருக்குமாயின் அப்பொழுது இந்த அற்புதத் தோற்றம் உண்டாகும். வானவில்லானது அர்த்தசக்கிரரூபமாக சிவப்பு, மஞ்சள், பச்சை, ஊதா ஆகிய இந்த வர்ணங்களோடு கூடிய ஓர் பட்டையான வில்லாக ஆகாயத்தில் காணப்படும். இது பார்வைக்கு மிகுந்த மனோரம்யமாக இருக்கும். சந்திரவெளிச்சத்திலும் இம்மாதிரியான வானவில் உண்டாகலாம். ஆனல் இந்த வில்லிலிருக்கும் வர்ணங்கள் எல்லாம் மங்கலாகஇருக்கும். இந்தத்தோற்றம் அபூர்வம். இதுவரையில்நான் இரண்டொருதரம் தான் இதைக்கண்டிருக்கிறேன். ஸாதாரணமாக பௌர்ணமிக்கு முன்னும் பின்னும் உள்ளஇரண்டு மூன்று நாள்களுக்குள் மேற்கேமழை ஏற்பாடுமாயின் சந்திரவெளிச்சத்தால் உண்டாக்கப்படும் வானவிற்களைக்காணலாம். ஸூர்யனுல் உண்டாக்கப்படும் வானவிற்

களை நாம் அடிக்கடி காண இடம் உண்டாவது தினம் இருமுறை அது உண்டாவதற்கு இடம் இருப்பதால் தான்.

சந்திரன் விஷயத்தில் வானவில்லை வேறுவிதமாக அடிக்கடிக்காணலாம். சந்திரனைச் சுற்றிச் சிற்சில ஸமயங்களில் மேகங்கள் சக்கிரமாக ஒதுங்கி நிற்க அதன் மத்தியில் சந்திரன்நிற்கும். இந்த மேக சக்கிரத்திற்கு பரிவேஷம் என்று பெயர். இப்படி ஸூர்யன் விஷயத்திலும் உண்டாவது உண்டு இந்தப் பரிவேஷம் உண்டாகுங்கால் சந்திரனுக்கு அருகாமையில் பட்டையான் சிறு சக்கிரங்கள் காணப்படும் இவைகளில் வானவில் வர்ணங்கள் மங்கலாகத்தோன்றும். இம்மாதிரியான சக்கிர வானவில்லை சந்திரன் விஷயத்தில் காணலாம் ஸூர்யன் விஷயத்தில் மத்தியன்னத்தில் மழை மேகங்கள் சூழ்ந்திருக்கும் ஸமயத்தில் சக்கிரமான வானவிற்களைக் காணலாம். இது மிகுந்த அபூர்வமான தோற்றம்.

வானவிற்கள் வேறு சில ஸந்தர்ப்பங்களிலும் உண்டாகும். பெரியமலையருவிகளின் தண்ணீர் சிறு திவலைகளாகி ஆகாயத்தில் சிதறிவெகு தூரம்கொண்டு போகப்படும். இம்மாதிரி அருவிகளின் அருகாமையில் போவதற்கு முன்னமேயே நாம் தெப்பமாக நனைந்து போகவேண்டியதுதான். இந்தத்திவலைக் கூட்டங்களில் வானவிற்கள் ஸூர்யன் ஒளியால் உண்டாக்கப்பட்டு வெளியாகும். இங்கு அது வட்டதின் ஓர் சிறுபாகமாக மாத்திரம்தான் காணப்படும். இவைகளால் அருவிக்கு அழகு அதிகரிக்கும். இவ்வருவிகளில் ஸூர்யன் ஒளிபடும் பாகங்களில் நாம் தலைகொடுத்து விட்டு நமது தலையில் விழும் ஜலம் சிறுதிவலைகளாகச் சிதறிப்போய் நம்மை சுற்றி துணிபோர்த்தாற்போலப் பரந்து விழும்படிசெய்தால் இங்கும் இவ்வில் உண்டாகும். இது மற்றவிற்கள்போல குறைந்தவட்டமாக இராது பூர்ணசக்கிரமாக நம்மைச் சுற்றித் தோன்றும். தலையை அருவியிலிருந்தும் எடுத்து விட்டால் இத்தோற்றம் உடனே மறைந்துவிடும், மறுபடியும் கொடுத்தால் இத்தோற்றம் மறுபடியும் உண்டாகும். இதுபோலவே தண்ணீர் சிறுதிவலைகளாகி எங்கு காணப்பட்டாலும் ஸரி அங்கு ஸூர்யன் ஒளிபடுமாயின், தகுந்தஸமயங்களின் வானவிற்கள் உண்டாகின்றன. ஸமுத்திரக்கறையில் தண்ணீர் திவலைகளாகி ஏராளமாக சிதறி ஓடுவதால் அங்கும் இம்மாதிரி வில் தக்க ஸமயங்களில் உண்டாகும். இதற்கு ஸமுத்திரவில் என்றுபெயர்.

முற்கூறிய ஒழுங்கை மனதில் வைத்துக்கொண்டு நாமே வானவிற்களை உண்டாக்கிவிடலாம். வாய்நிறையத்தண்ணீரைவிட்டுக்கொண்டு வாய்க் கொப்பளிப்பதுபோல தண்ணீரை வெளியில் விடும்பொழுது அது சிறுதிவலையாக சிதறும்படி அதை வெளியாக்கவேண்டும். இம்மாதிரி சிறுகுழந்தைகள் கையலம்புங்கால் சிற்சில ஸமயங்களில் செய்வதுஉண்டு. இவ்வாறு செய்புங்கால் ஸூர்யனை நமக்கு ஓர் புறத்திலும், தண்ணீர் சிதறி ஓடுவதுமற்றோர் புறத்திலும், இருக்கும்படி செய்தால் அங்கு உடனே வானவில் உண்டாகிவிடும். இவ்வாறு எல்லோரும் செய்து பார்த்து ஆனந்திக்கலாம். வேறோர்வழியிலும் இந்த அற்புதத்தோற்றத்தை நாம் உண்டாக்கலாம். நமது விரலை தண்ணீரில் தோய்த்து அதன் நுனியில் ஓர் துளிநீர் நிற்கும்படிசெய்யவேண்டும். அதைநமக்கும் ஸூர்யனுக்கும் இடையில் சற்றுவடக்கு அல்லது தெற்குப்பக்கமாவது ஒதுங்கியிருக்கும்படிப் பிடித்தால் வானவில்லின் வர்ணங்களெல்லாம் அதனுள் நன்றாகக்காணப்படும். அந்தச்சிறுதுளியானது முற்கூறியுள்ள வர்ணங்களோடு வெகு அழகாக ஒளிவீசிப்பிரகாசிக்கும். இதுபோலவே அநேகம்துளிகள் மழைபெய்புங்கால் விழுவதால் அவைகளில், தகுந்த உயரத்தில் இருப்பவைகள் எல்லாம் இத்துளிபோல ஒளிவீசிப்பிரகாசிக்க ஆகாயத்தில் வர்ணங்களால் ஆக்கப்பட்டவில் போன்றதோற்றம் உண்டாகின்றது.

இப்பொழுது கூறிய தோற்றத்தைப் போன்றதுதான் வயிரநகைகளில் வயிரம்டால் வீசுவதும் புற்கள் புஷ்பங்கள் முதலியவைகள் நுனியில் இருக்கும் பனித்துளிகள் டால்வீசிப் பிரகாசிப்பதும், முத்துச்சிப்பி, சிலந்திவலை, கண்ணிமை ரோமம் ஆகிய இவைகள் வர்ணங்களோடு பிரகாசிப்பதும். ஆனால் நகைகளில் பதிக்காத வயிரம் டால்வீசுவதும், சரலாந்தல் கண்ணாடிகள் டால்வீசுவதும் வானவில்லைப்போன்றவைகள் அல்ல. இவைகள் எல்லாம் ஒரேமாதிரித் தோற்றம் உடையவைகளாய் இருப்பினும் இவைகளை உண்டாக்கும் காரணங்களை உற்றுநோக்கின் மாறுபாடு உடையனவாக இருக்கும். இந்த வித்யாஸத்தைப் பின்னர் இவ்வற்புதத்தோற்றம் உண்டாக ஏற்படும் காரணங்களைப்பற்றி விவரிக்குங்கால் நன்றாக எடுத்து விவரிப்போம்.

ஆகாயத்தில் உண்டாகும் வானவிற்களில் காணப்படும் விசேஷங்களைச் சற்றுவிவரிப்போம். ஸாதாரணமாக ஓர் வானவில்தான் மழைபெய்யுங்கால் ஆகாயத்தில் காணப்படும். இதற்கு முதல் வில் என்று பெயர். இது பிரகாசமாக இருக்கும். இதில் பார்வைக்கு நான்கு அல்லது ஐந்துவர்ணங்கள் தான் தெரியும். அவையாவன சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா ஆகிய இவைகளே. இதுபோன்ற வர்ணங்களை உண்டாக்கும் சரலாந்தல் கண்ணாடி ஒன்றை இருட்டறையில்வைத்து ஸூர்யவெளிச்சத்தின் சிறுபாகத்தை எரிக்கும் கண்ணாடி மூலமாக பலப்படுத்தி அந்தச்சரலாந்தல் கண்ணாடியின் ஓர்பட்டையின்மேல் படும்படி விட்டால் சுவற்றில் இவ்வர்ண வெளிச்சங்கள்காணப்படும். சரலாந்தல் கண்ணாடியை மெதுவாகத் திருப்பிவந்தால் இந்த வெளிச்சத்தின் பிரகாசம் அதிகரிக்கும். அதிகப்பிரகாசம் வருங்கால் வர்ணவெளிச்சங்களை ஓர் எரிக்கு கண்ணாடியால் பலப்படுத்தி, ஓர்வித பலகையின்மேல் படும்படிவிட்டால் இதனுள் எழுவர்ணங்கள் நன்றாகப் பிரிந்து காணப்படும். அவையாவன ஊதா, அதிநீலம், நீலம், பச்சை, மஞ்சள், சிவப்புமஞ்சள், சிவப்பு ஆகிய இவைகளே. வானவில்லில் உட்புறத்தில் ஊதாவும், வெளிப்புறத்தில் சிவப்புமாகி ஒழுங்காக முற்கூறிய எழுவர்ணங்களும் காணப்படும். சிற்சில ஸமயங்களில் இதைவிட மங்கலாயும் பெரிதாயும் முன்னதன் வெளிப்புறத்தில் ஓர் வில் காணப்படும் இதற்குஇரண்டாவது வில் என்று பெயர். இதில் உட்புறத்தில் சிவப்பும் வெளிப்புறத்தில் ஊதாவும் ஒழுங்காகவும் முன்னதற்குமாறாகவும் காணப்படும், இம்மாதிரியான இரண்டாவது வில் இவ்வருஷம் ஜூன்மாதம் பெய்த ஓர் மழையில் ஸமுத்திரக் கரையில் காணப்பட்டது. மலையின் வீழ்அருவிகளிலும் அங்குபெய்யும்மழைகளிலும் மூன்று வில்கள் காணப்படும். மூன்றாவது வில் முதல் இரண்டாவதைவிட மிக மங்கலாக இருக்கும். இதில் காணப்படும் வர்ண ஒழுங்கு முதல் வில்லிலிருப்பது போல இருக்கும். இதுவரையில் நான்குவிற்கள் தான் மனிதருக்குத் தென்பட்டிருக்கிறது. இவ்விற்கள் உண்டாகும் காரணத்தை நோக்குங்கால் அநேக விற்கள் இருக்க இடம்உண்டாயினும், போகப்போக விற்கள் மங்கலாகப் போவதால் நான்கிற்குமேல் நமது கண்களுக்குப் புலப்படுவது அஸாத்யம். இவ்வாறு உண்டாகும் அநேகவிற்களுள் ஒற்றைப்படை விற்களில் வர்ண ஒழுங்கு முதல் வில்லைப்போலவும், இரட்டை படைவிற்களில் வர்ண ஒழுங்கு இரண்டாவது வில்லைப்போலவும், காணப்படும். சிற்சில ஸமயங்களில் சிவப்பு, பச்சை ஆகிய இவ்விருவர்ணங்களுடன் ஓர் வில் முதல் வில்லின் உட்புறத்திலாவது இரண்டாவது வில்லின் வெளிப்புறத்திலாவது காணப்படும் இதற்கு கணக்குள் அடங்காத வில் என்று பெயர்.

வானவில்லாகிய அற்புதத் தோற்றத்திற்குக் காரணம் யாது என்ற விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். பனித்துளி, பதித்தவயிரம், விரல் நுனியில் இருக்கு தண்ணீர்த்துளி, மலை அருவி, வாய்க்கொப்பளிக்கும் நீர் முதலிய விடங்களில் உண்டாகும் வானவில் தோற்றத்திற்கும் அதுவே காரணமாகும். தண்ணீர்த்துளி ஸப்தவர்ணத்துடன் ஸூர்யன் ஒளியில் பிரகாசிப்பதன் காரணத்தைநன்குதெரிந்துகொண்டால்வானவில் உண்டாவதற்கு காரணம் இன்னது என்று தெரிந்துகொண்டதாகும். இதற்குக்காரணம் அநேகமழைத் துளிகளில் இடைவிடாது இம்மாதிரித்தோற்றம் உண்டாவதால் தான் வானவில் உண்டாகின்றது என்பதே. ஒருதுளி ஜலமானது சிறுகோளாகாரமாகஇருக்கின்றது. அதன்மேல் படும் ஸூர்யன் ஒளி பெரும்பாலும் உள்ளே ஊடுருவிச் சென்றுவிடுகின்றது. உட்சென்ற ஒளிதண்ணீர்த்துளியில் பட்டமாதிரத்தில் பெரும்பாலும் ஊடுருவிச்செல்லாதுபிரதி பலனமாகின்றது. இவ்வாறான ஒளி தண்ணீர்த்துளியின் உள்ளே வேறோர்பக்கத்தில்சென்று தாக்க அதில் ஓர்பாகம் ஊடுருவிச் செல்கின்றது, மற்றையபாகம் பிரதிபலமானகின்றனது. இது நமது கண்ணில் வந்து தாக்குங்கால் டால்வீசுகின்ற தோற்றத்தை உண்டாக்குகின்றது.

இப்படியாயின் ஸூர்யன் ஒளி எழு வர்ணமாகப் பிரிந்து காணப்படுவானேன் என்ற கேள்வி பிறக்கும். ஸூர்யன் ஒளி எழுவர்ணங்களாலாகிய ஒளி என்பது சரலாந்தல் கண்ணாடி மூலமாக எளிதில் காணலாம். அது ஸூர்யனது வெள்ளை ஒளியை எழு வர்ண ஒளிகளாகப் பிரித்து விடுகின்றது. இதற்குக் காரணம் பின் வருவது. வர்ணவெளிச்சங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாக வளைந்தே கண்ணாடி, தண்ணீர் முதலியவைகள் உள்ளே ஊடுருவிசெல்லும் குணமுடையன. சிவப்புவர்ண வெளிச்சம் அதிகமாக வளையாது, ஊதாவர்ண வெளிச்சம் அதிகமாகவளையும் குணமுடையது. சிவப்புக்கும் ஊதாவுக்குஇடையில்

உள்ள மற்றைய வெளிச்சங்கள் ஒழுங்காக மத்தியமாயும் முன்னதைவிடப் பின்னது அதிகமாயும் வளைந்து ஊடுருவிச் செல்லும் குணம் உடையன. இதனால்தான் இவ்வேழு வர்ணங்களாலாகிய ஸூர்யவெளிச்சம் தண்ணீர் சரலாந்தல் கண்ணாடி முதலியவைகளில் பட்டு ஊடுருவிப்போகும்கால் அதன் எழுவர்ணங்களும் அவைகளுக்குத் தக்கபடி வளைக்கப்பட எழுவர்ண வெளிச்சங்களாக பிரிக்கப்படுகின்றன. இந்த தொழிலுக்கு பி ந்தல் என்றுபெயர். இதனால் ஸூர்ய வெளிச்சம் அதன் எழுபாகங்களாகப் பிரிக்கப்பட நமக்கு வர்ணவெளிச்சத் தோற்றங்கள் உண்டாகின்றன. இம்மாதிரித்தோற்றம் ஸூர்யன் நிற்கும் உயரத்தையும் மழைத்துளிகள் இருக்கும் உயரத்தையும் பொருத்தது. ஸூர்யன் உச்சிக்கு அருகேவரும் பொழுதும் அஸ்தமனமாகும் பொழுதும் இத்தோற்றம் உண்டாகாது. மத்திய ஸமயங்களில் ஸூர்யனுக்கு எதிரேதோற்றம் உண்டாகும் ஆதலால் தகுந்த உயரத்திலிருக்கும் மழைத்துளிகளில் தகுந்தபடி வந்துதாக்கும் ஸூர்யன் ஒளி அவைகளுள் ஊடுருவிச்சென்று ஒருதரம் உள்ளே பிரதிபலனம் செய்யப்பட்டு மறுபடி ஊடுருவிவெளியேவந்து நமது கண்ணில் படுவதால் உண்டாகும் தோற்றம் வானவில்என்பது தெரியவரும் இதே காரணத்தால்தான் முற்கூறிய இதுபோன்ற தோற்றங்களும் உண்டாவது.

இப்பொழுது கூறப்பட்ட காரணத்திலிருந்துமழைவில் உண்டாவதற்குக் காரணம் தெரியவந்தது. மற்றய அநேகம் விற்கள் உண்டாகக் காரணம்யாது என்பதை விவரிப்போம். தண்ணீர் துளியுள் ஒருதரம் பிரதிபலனம் ஆனபின்புமறுபடி உள்ளேயேவேறோரிடத்தில் தாக்கும் வெளிச்சத்தில் ஓர்பாகம் மாத்திரம்தான் ஊடுருவி வெளிவருவதாக முன்னர் கூறப்பட்டுள்ளது. மற்றையப் பாகம் இரண்டாம் தரம் பிரதி பலனமாகி துளியுள் வேறோர் பாகத்தைச் சென்று தாக்க அதன் ஓர்பாகம் அங்கு ஊடுருவிச் செல்ல மற்றையப்பாகம் மூன்றும் தரம் பிரதிபலிக்கும். இம்மாதிரியே தண்ணீர்த் துளியுள் அநேகம் தரம் பிரதிபலனமும் ஊடுஉருவி வெளிவருதலும் நடக்கும். இதில் முதல் பிரதிபலனத்தின் பின்பு வெளிவந்து நமது கண்ணில் படும் ஒளியால் முதல் வில்லும், இரண்டு பிரதிபலனத்தின் பின்வரும் ஒளியால் இரண்டாவது வில்லும் உண்டாகின்றன. இப்படி உண்டாவதை இங்கு அமைத்துள்ள சித்திர த்தில் காட்டப்பட்டிருக்கிறது இதுபோலவே மூன்று நான்கு முதலிய பிரதிபலனத்திற்கிற்குப்பின் முறையே வெளிவந்து நமது கண்ணில் படும் ஸூர்யனது பிரிந்த ஒளிகளால் மூன்றாவது நான்காவது முதலிய அநேகவிற்கள்உ ண்டாகலாம். கணக்குள் அடங்காத வில் உண்டாகக் காரணம் இன்னது என்பதை இன்னும் ஒருவரும் விளக்கவில்லை.

வானவில்முதலிய இனமான தோற்றங்களுக்கும் சரலாந்தல் கண்ணாடியில் உண்டாகும் தோற்றத்திற்கும்யாது வித்யாஸம்என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். சரலாந்தல் கண்ணாடியின் ஓர்பட்டையில்படும் ஸூர்யன் ஒளி ஊடுருவிச் செல்லுங்கால்வளைக்கப்பட அதன் வர்ணங்கள் அங்கேயே பிரிக்கப்படுகின்றன. பிரிந்து நிற்கும் எழுவர்ணஒளிகளும் வேறோர்பட்டையின் உட்புரம் வந்துதாக்க அங்கும் ஊடுருவிவெளிருங்கால் மறுபடியும் வளைக்கப்பட அவைகள்நமது கண்ணில் படுகின்றன. இதனால் இக்கண்ணாடிகளில் காணப்படும் தோற்றம் இரண்டு ஊடுருவிச் செல்லல் மாத்திரமாக உண்டாவது. அனால்வானவில்முதலிய இனத்தோற்றங்கள் இரண்டுஊடுருவிச் செல்லாலும், அதன் மத்தியில் எற்படும் பிரதி பலனங்களாலும் உண்டாகின்றன.

இந்த வியாஸத்தை முடிக்கும் முன்னர் ஸூர்யன் ஒளி எழுவர்ண ஒளிகளால் உண்டாவது என்பதை வேறுவிதமாகக் காட்டுவோம். ஓர் வட்டமான அட்டையை எடுத்து அதன் மத்தியிலிருந்து எழுகோடுகள் இழுத்து அந்த அட்டையை எழுபாகமாகப் பிரிப்போம். ஒவ்வொரு பாகத்திலும் ஒழுங்காக வானவில்லில் காணப்படும் எழுவர்ணங்களையும் அமைப்போம். இந்த அட்டையின் மத்யபாகத்தை ஓர்சுற்றும் சக்கிரத்தில் மாட்டி இதைவேகமாகச் சுற்றுவோம். அப்பொழுது அட்டை வெளுப்பாகத்தான் காணப்படும். அட்டைசுற்றும் வேகத்தால் எழுவர்ணங்களின் ஒளிகளும்சேர்ந்து நமதுகண்ணில்பட நமக்குவெள்ளை ஒளியின்தோற்றம் உண்டாகின்றது. சரலாந்தல் கண்ணாடிமூலமாக ஸூர்யன் ஒளியாகிய வெள்ளைஒளியைப் பிரித்துஅது எழுவர்ண ஒளிகளாலாகியது என்றுகாட்டியதை இங்கு எழுவர்ண ஒளிகளைச் சேர்த்தால் வெள்ளை ஒளியாகின்றது என்று காட்டி வற்புறுத்தியிருக்கிறது.

ஸூர்யன் ஒளிசெய்யும் அற்பத்தொழிலைப் பாருங்கள்! முன்னமேகானல் நீர்விஷயத்தில் ஸூர்யன் உஷ்ணத்தின் அற்புதக்காரியத்தை காட்டினோம். இனிவரும் ஸஞ்சிகைகளில் ஸூர்யன் ஒளியாலாகும் அற்புதக்காரியங்களை எடுத்து விவரிப்போம்.

# உழவுநூல்

## AGRICULTURE

நிலம் உண்டாகும்விதம்.—முக்கிய ஏதுக்கள் மரஞ்செடி உயிர்ப்பிராணிகளின் ஏதுவாலும், வெயில் மழைமுதலியனவை தாக்குதலாலும், மழைஜலம், ஆற்றுஜலம் இவற்றின் செயலுக்குத் தக்கபடியும் நிலம் பலமாதிரியாக உண்டாகின்றது.

நிலம்.—நாளா விருத்தியில் பாறை கரைந்துண்டான மண்ணோடு இந்திரியப்பொருளும் கலந்து புழுப்பூச்சிகளின் செயலால் மாற்றப்பட்டும் ஆகாயம் அடிக்கடி மோதுதலால் திருத்தப்பட்டும் பூமி மட்டத்திற்குப் பரவியிருக்கும் தளமே நிலமாகும். பூமியின்மேல் பரப்பு குளிர்ந்திறுகும்போது மலையில் பிளப்பும், பள்ளத்தாக்குகளில் சில உயர்வும் உண்டாகின்றன. பிற்பாடு மழை, வெயில், காற்று முதலியவற்றால் நாளாவிருத்தியில் ஸமமாகிறது. மரஞ்செடி உயிர்ப்பிராணிகளும் தம்சக்தியால் நிலத்தின் தன்மையை மாற்றக்கூடியவை.

தேய்வுபாடு(Weathering).–முக்கியமாய்த்தேய்வுபாடு கீழ்க்குறிக்கும் வகையால் நேர்கின்றன. (1) உஷ்ணஅதிகரிப்புமாறுதல்கள் (2) நீர்க்கோர்ப்பும், காய்வும்(3)உறைபனி (4) மழை, கரியமலவாயு, ஓடும் நீர் (5) மரஞ்செடி உயிர்ப்பிராணிகளின் செயல் (*a*) பூமியில் தோண்டும் பிராணிகளின் செயல் (எலி முயல்போன்ற ஜெந்துக்கள்) (*b*) மட்புழுவின் செயல் (*c*) மனிதன், வெட்டிக்கொத்திச் செய்கிற மாறுதல்கள் (*d*) மரஞ்செடி வளர்ச்சியின் சக்தியால் உண்டாகும் மாறுதல்கள்.

(செயல்கள்) (1) செடிகள் வளர்வதற்கு இடத்தைக் கொடுக்கிறது. (2) அவை வேர் ஊன்றுகின்றன. (3) புழுப்பூச்சிகள் செய்யும் மாறுதல்களுக்கும் மற்ற மாறுதல்களுக்கும் இடமாயிருக்கிறது.

நிலவகையின் பாகுபாடு.—(1) வண்டல்நிலம் (Alluvial soil) வடசர்க்காரிலுள்ள "லங்கா நிலம்" காவேரிப்பாசனத்திலுள்ள செழிப்புநிலம், தோட்டமண் இவையெல்லாம் வண்டல் நிலமென்று சொல்லப்படும்.

2. கறுநிறமுள்ளதும் பருத்தி விளையக்கூடியதுமானநிலம்.—(Black cotton soil) இம்மாதிரியான நிலம் விடுபட்ட ஜில்லாக்களான கடப்பை, கர்னூல், பல்லாரி, அநந்தபுரம் முதலான ஜில்லாக்களிலும், கோயம்பத்தூர், திருநெல்வேலி, மற்றும்பெரிய ஜில்லாக்களிலும் உண்டு. இவ்வகை நிலம் அதிக ஆழமான கெட்டிநிலங்கள் அல்லது இரும்புச்சத்துள்ள நிலம்.

3. செம்மண்நிலம் (Red soil) இம்மாதிரியான பூமி செழிப்பற்றவை ஏனென்றால் இவ்வகை நிலத்திலுள்ள சிறுமண் தூளியிராததாலும் அதுபற்றி வறண்டிருப்பதாலுமே.

4. சுண்ணம் கலந்துள்ளநிலம்.—(Caleareous soil) சுண்ணக்கல் சேர்ந்து உண்டானது. இம்மாதிரியான பூமி எப்போதும் சாம்பல் நிறமாயிருப்பதில்லை. சற்று கறுப்பாகவும் மாறிவிடும்.

5. மணற்பாங்கானநிலம்.–(Arenaceous soil) இம்மாதிரியான நிலத்தின் மண் கடல்மணலைபோலிருக்கும். மேற்குறித்த 5-வகையான பூமியை தம்மிடத்துள்ள களிமண்ணுக்குத்தக்கபடி வேறுமூன்று வகையாகவும் பிரிக்கலாம்.

1. களிமண்பூமி.—$\frac{2}{3}$பாகத்துக்கு அதிகமாகக்களிமண்ணிருப்பது.

2. பசளைமண்பூமி.—(Soamy Soil). $\frac{1}{3}$முதல் $\frac{2}{3}$பாகம் களிமண்ணிருப்பது.

3. மணற்பூமி,—$\frac{1}{3}$-க்கு குறைச்சலாகவே களிமண்ணிருக்கும். மேலே வகுக்கப்பட்ட மூன்றுவித நிலங்களும் தம்மிடத்துள்ள இந்திரியப்பொருள், மற்றும் செழிப்புப்பொருளின் அளவுக்குத்தக்கபடி பின்னும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் இப்படிப் பாகுபாடு செய்வதால் மொத்தம் 5 வகைநிலமாகப் பிரிக்கலாம். மேலும் இவற்றில் ஒவ்வொன்றையும் இரண்டு வகையாகப்பிரிக்கலாம்.

மிகவும் கற்பாங்கான நிலம்.—கடைசி வகுப்பின் கீழ்வரும்.

'இரசல் நிலம்' என்பது தன்னிடத்துள்ள மண் மிகவும் தூளாகவும் இலகுவாய் உழக்கூடியதுமாகவிருக்கும் இவ்வகை நிலத்துக்கு முற்றிலும் மாறுபாடானது 'கடின நிலம்' இவை தவிரவும், இறுகினது தளர்ந்தது; நீரை சீக்கிரம் உறிஞ்சுவது அல்லது அது இறங்க இடங்கொடுப்பது; ஆழமுள்ளது, ஆழமில்லாதது; செழிப்புள்ளது செழிப்பற்றது; என்று பலவகை நிலங்களுண்டு.

பூமி ஈரத்தை கவர்ந்துகொள்ளும் சக்தி.—இச்சக்தியானது ஆகாயத்தின் உஷ்ணநிலை, நீரா

வியின் அளவு ; வறட்சி, அல்லது ஈரமிகுதி, நிலத்தின் தன்மை, அதன் நிலைமை—ஆகிய இவற்றுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். நிலத்தை எவ்வளவுக் கெவ்வளவு நன்றாய் உழுது தளாக்கிறோமோ, அவ்வளவுக்கு வித்தைக் கவர்ந்து கொள்ளக்கூடியது.

வாயுக்களைக் கவர்ந்துகொள்ளும் சக்தி.—நிலத்திற்கு, வாயுக்களைக்கவர்ந்து தன்னிடத்திலுள்ள இடைவெளிகளில் அடக்கிவைத்துக்கொள்ளும் சக்தியுண்டு. இவ்வாறு நிலத்துவாரங்களில் அடைபட்டகாற்று முழுதும் வெளி ஆகாயத்தைப் போன்றதன்று.

அதனிடத்தில் ஆகாயத்தைவிட, ஜலவாயு, கரியமலவாயுக்கள் மிகவும் அதிகமாயிருக்கின்றன. பிராணவாயு எறக்குறைய இல்லை என்றே சொல்லிவிடலாம். இந்திரியப்பொருள் மிகுதியாயுள்ள நிலங்களில் கரியமலவாயு, ஜலவாயுக்கள் ஏராளமாகவிருக்கின்றன. செழிப்பான நிலத்தின் மேற்பரப்பானது ஆகாயத்தினின்று நவச்சாரத்தைக் கவர்ந்து கொள்ளக்கூடியது. இவ்வாறு இழுத்துக்கொள்ளப்பட்ட நவச்சார சத்தானது நவச்சார உப்பாக மாறிக்கொண்டு வருமானல் மேன்மேலும் நவச்சார சத்தானது நிலத்தில் படியும். இவ்வாறு நவச்சாரச் சத்தை நவச்சார உப்பாக மாற்றிக்கொள்ளக்கூடியதும், நீர் அல்லது வாயுக்கள் சிக்கிரம் இறங்கக்கூடியதுமான நிலமானது மேற்கூறியவன்மையால் ஏராளமான நவச்சாரச்சத்தைக் கிரகித்துக் கொள்ளக்கூடியதாகும்.

நீரில் கரையக்கூடிய பொருள் கரைந்திருந்தால் பொருளைமாத்திரம் பிரித்துக்கொள்ளும் சக்தி (Power of Fixing Solids from Solution) பாஸ்கராமிலத்திராவகம், மரச்சாம்பல்களில்லை நவச்சாரக் கட்டிகள் கரைந்துள்ள நீரை செழிப்பானநிலத்தில் ஊற்றினல் நீர்மாத்திரம் பூமியில் இறங்கிச் செல்லுமேயொழிய அதிற்கரைந்தமற்றப் பொருள்கள் மேலாகத் தங்கிவிடும் இச்சக்தி மிகவும் முக்கியமானதொன்றேயாம், ஏனென்றால் மழைபெய்து நிலத்தின் செழிப்புப் பொருள்களை தன்னுடன் அரித்துக்கொண்டு உள்ளே இறங்காதபடி தவிர்க்கின்றது. இவ்வாறு தடுக்கும் நிலப்பொருள்களாவன.—(Hydrates of ferric oxide and alumina. The hydrosilicates of aluminium aud humus nitrates). தார்க்கியச உப்புக்களும், சுண்ணமும் இவ்வாறு நிலத்தால் இலகுவாய் தடைபடக்கூடியனவையல்ல.

நீரானது நிலத்தில் இறங்கும்சக்தி.—(Permeability of Water) இச்சக்தியினல் நீரானது நிலத்தில் இறங்குகிறது. நிலத்திலுள்ள துவாரம் அகன்றிருந்தால் சீக்கிரம் செல்லக் கூடும். உருண்டையான மணலுள்ள நிலத்தில் மிகவும் இலகுவாய் இறங்கும். நிலத்திலுள்ள கண்கள் எவ்வளவு நுட்பமாயிருக்கின்றனவோ அளவுக்குத் தக்கபடி நீரைத் தங்கும்படி செய்யும் சக்தியுண்டு. இக்கவிற்சியைத்தான் நீர் ஏற்கும்சக்தி என்பது, (Capillarity) நிலக்கணக்களின் மூலமாக நீர்மிகவும் அதிக ஆழத்துக்கு இறங்கும் படிவிடக்கூடிய நிலத்தில் (In a very porous soil) நீரானது உரத்தையும் கரைத்துக் கொண்டு மிகவும் கீழே இறங்கிவிடுமானல் செடிகள் உணவைக்கிரகிக்க இயலா. அத்தன்மையதான நிலத்தைத்தான் ஆங்கிலத்தில் "பசித்தநிலம்" (Hungry soil) என்று சொல்லுகிறார்கள். இதைச்சிலவிடங்களில் கரையான்கட்டுமண் எனவழங்குகிறார்கள். மிகவும் தளாயிருக்கும் நிலமானது நீரை நிலத்தில் வேண்டிய மட்டிலும் கூட இறங்க வொட்டாமல் தவக்கும்படி செய்து கொள்ளுமானல் அப்படிக் கட்டிப்போகக் கூடிய ஜலத்தை வடித்துக் கொள்ள வேண்டும். நீரானது மிகத்தீவிரமாய் இறங்காமலும் அல்லது மிகவும் மெள்ளச் செல்லாமலுமிருக்கும் நிலமே சிறந்த நிலமாகும். இவ்விஷயத்தில் நிலத்தின் குணத்தை விளக்குத்திரியின் குணத்துக்கு ஒப்பிடலாம். ஏனெனில் விளக்கில் எண்ணெய் வார்த்து கொடி அல்லது திரிச்சேர்த்து, விளக்கை ஏற்றினல் ஏற்றினதுமுதல் திரியின் மூலமாய் எண்ணெய்ஒரே அளவாக மெதுவாக ஏறி விளக்கை எரியப்பண்ணும். அதுபோலத்தான் இந்நிலத்தின் தன்மையும்.

நிலமானது விரிந்து சுருங்குதல்.—எல்லாவகை நிலங்களும் நீரினல் நனைந்தால் விரியும்; ஆனல் உஷ்ணத்தால் வரண்டால் சுருங்கும். பொதுவாக நீரினதுதன்மை விரியச்செய்வதே. ஆனல் சில நிலங்கள் நீரினல் சுருங்கும். உதாரணமாக உவர் நிலங்கள் (Sodium carbonate) சோடியம் கார்பநேட் என்னும் உப்புள்ள களர் நிலம். இந்திரியப் பொருள் மிகுதியாயுள்ள நிலங்கள் நனைந்தால் மிகவும் அதிகமாகவிரியும் பரிசோதனை செய்ததில் நூறிற்கு இருபது அதிகமானதைக் குறித்திருக்கிறது. களிமண்ணிலமானது நூற்றிற்கு 18. 3 - வீதம் விரிகிறது. மணற்பாங்கான நிலம்மிகவும் சொற்பந்தான் விரியும். களிமண் உலரும்போது 100-க்கு 15-முதல் 20-வீதம் சுருங்குகிறது.

சோடியம் கார்பநேட். கடினமானநிலத்தில் 100-க்கு 0 8-வீதம் (Sodium carbonate) இருந்தாலும் நிலத்தை உழுவது அசாத்தியமாகிவிடுகிறது மேலும் செடிகளின்வேர் மூலங்களும் அழிகின்றன. ஈரப்பசையும் குன்றிவிடும்.

**BY A SPECIALIST.**

## சுகாதாரவிளக்கம்
### HYGIENE
வஸ்திரம்

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது

115. ஸ்நானம் செய்து முடிந்தபிறகு ஒவ்வொருவரும் வஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டும் என்பது அவசியமல்லவா? அவ்வஸ்திரம் எப்படியிருக்க வேண்டும்?

116. வஸ்திரம் அவசியம்.—சில மிருகங்கள் அவ்வவைகள் வசிக்கவேண்டிய விடத்துக்குத் தக்கபடி மேல் மூட்டமாகிய உரோமம் தடிப்பான தோல்கள் இவைகளுடன் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. உஷ்ண தேசத்திலிருக்கும் பூனையின் அமைப்பிற்கும் சீததேசத்துப் பூனையின் அமைப்பிற்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கின்றது. சீத தேசத்துப் பூனைக்கு அதிகரோமம் அடர்த்தியாய் தேகமெங்கும் வளர்ந்து அதற்கு சுகத்தைக் கொடுக்கும். ஒரு தேசத்து மிருகம் மற்றொரு தேசம் போனால் சுகமாய் ஜீவிக்காது. கொஞ்சகாலத்தில் மாண்டுபோம். மனிதன் ஒருவன்தான் தனது புத்தியால் தகுந்த வஸ்திரம், உடுப்பு முதலியவைகளை ஏற்படுத்திக்கொண்டு எத்தேசத்திலும் சுகமாய் வாழலாம்.

117. குளிர்தேசத்தில் வஸ்திரம் அவசியம்.—அதிக உஷ்ணமாகிய நமது நாட்டில் வஸ்திரத்தின் அவசியம் நமக்கு அவ்வளவுஅதிகமாகத் தெரியாது. ஹிமாசலம், நீலகிரி முதலிய சீத தேசத்தில் வஸ்திரமில்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. அவனை உயிருடன் காப்பாற்றி வைப்பதில் வஸ்திரம்முக்கிய காரணமாயிருக்கின்றது. சீதத்துக்குத் தகுந்தபடி நாம் வஸ்திரமணியும் உபாயத்தால் நமது தேகச்சூடும் நமது ரத்தச்சூடும் குன்றாமலிருக்க நாம் வழி தேடிக்கொள்ளுகின்றோம். நமது உடுப்பு இவ்வளவு அழுத்தமாய் இருக்கவேண்டும் என்பது ஒவ்வொருவனுடைய தேக அமைப்பையும் ஒட்டினதாகவிருக்கின்றது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களும் அதிக பலமற்ற சிறியவர்களும் தங்கள் தேகத்தை ஒட்டினாற்போல் எப்பொழுதும் கம்பளித்துணியால் (flannel) தைக்கப்பட்ட ஒருசட்டை போட்டுக்கொண்டிருப்பது தேகத்துக்கு சௌக்கியம் என்று சொல்லப்படுகின்றது. சிலர் வெகு நயமான தோலுள்ளவர்களா யிருக்கலாம். அவர்களுக்கு கம்பளி உறுத்தலாம். ஆகையால் அவர்கள் அக்கம்பளியின் உட்பக்கத்தில் பட்டுத்துணி சேர்த்து உடுப்பு தைத்து தரிப்பது ஆரோக்கியம். பருத்தி நூலாலும் சணலாலும் ஆகிய உடுப்புகளுக்கும் வஸ்திரங்களுக்கும் மேலானவையாக கம்பளி வஸ்திரங்களை சுகஸந்தர்சன வாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

118. நிறம்.—வெளுப்புநிறம் நாம் உடுக்கும் வஸ்திரத்திலும் தரித்துக்கொள்ளும் உடுப்பிலும் அதிக சௌக்கியமென்றும், நீரை, மஞ்சள், நீலம், கறுப்பு இவைகள் உதவாத நிறங்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தேசத்துக்குத்தக்கபடி நாம் உடுப்பு தரிக்கவேண்டும். காலத்துக்குத் தக்கபடியும் அவ்வுடுப்பு இருக்கவேண்டும்,

119. காலத்துக்குத் தக்கஉடுப்பு.-குளிர்காலத்தில் காலைநன்றாகப் போர்த்துக்கொண்டு உட்கார்ந்தாலும் படுத்தாலும் நமது தேகத்திலுண்டாகும் வியாதி சீத உபத்திரவம் நீங்கும். குழந்தைகள் தேகத்தை குளிர்காலத்தில் நன்றாக கம்பளியால் மூடிவைப்பதில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இவ்வண்ணமே வயது சென்றவர்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

120. வஸ்திரத்தின் பிரயோஜனம்.—சீதத்தினின்றும் வெப்பத்தினின்றும் நமது தேகத்தைப் பாதுகாப்பதுடன் வஸ்திரமானது நமது தேகத்திலிருந்து உண்டாகும் வியர்வையை எப்பொழுதும் இழுத்துக்கொண்டே யிருக்கிறபடியால் நாம் நமது தேகத்துக்கு அருகாமையில் தரிக்கும் வஸ்திரத்தையும் உடுப்பையும் அடிக்கடி பரிசுத்தம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்: நமது தேகத்தின் அழுக்கு நமது வஸ்திரத்தில் சம்பந்தப்படுகின்றபடியால் ஒருவன் உடுத்தவஸ்திரத்தை மற்றொருவன் உடுத்துக் கொள்வது தேக சௌக்கியத் திற்குக்குறைவு. முதல் உடுத்திக் கொண்டவனுக்கு ஏதாவது சொரி சிறங்குகடி முதலிய கருமநோய்களிருந்தால் அவன் வஸ்திரத்தை மற்றொருவன் கட்டிக்கொள்ளும் காரணத்தால் இவனுக்கு அந்நோய் தொத்திக்கொள்ளும்.

121. நோயில் தரித்தஉடுப்பு.—நாமே நாம் தொத்து நோயாகிய சொரி, சிறங்கு கடி அம்மை முதலிய சமயங்களில் தரித்த உடுப்பையும் வஸ்திரத்தையும் அந்நோய்கள் நம்மைவிட்டு அகன்றபின்பு தரிப்பது சுகக்குறைவேயன்றி சுகமல்ல. ஆனால் நமது வஸ்திரங்களை அவ்வித காரணத்தால் நாம் அகற்றுகின்ற

தில்லை. அகற்றுமலே நமது வஸ்திரங்கள் நமக்கு சுகக்கு றைவை உண்டாக்காமலிருக்கும்பொருட்டு நாம் வெந்நீர் காயவிட்டு அவ்வெந்நீர்தளதளவென்று கொதிக்கும்பொழுது அதில் நமது வஸ்திரத்தையும் உடுப்பையும் நன்ருக அமுக்கி அரைமணிநேரம்வைத்து அதன்பிறகு எடுத்து சுத்தம்பண்ணி உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் தொத்துநோய் ஸம்பந்தமான சில கிருமிகள் நமது உடுப்புகளிலும், வஸ்திரங்களிலுமிருக்குமாயின் அவைகள் கொதிக்கும் வெந்நீரில் மாண்டுவிடும்.

122. சீதகாலஉடுப்பு.—சீதத்திலிருந்து நமது தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ள உரோமத்தாலாகிய துணிகளை உபயோகிக்கவேண்டும்.

123. உஷ்ணகால உடுப்பு.—உஷ்ணத்திலிருந்து நம்மை ரக்ஷிக்க வெண்மையானஉடுப்பே சிலாக்யம். துணியாலாகிய உடுப்புகளைக் காட்டிலும் எக்காலத்திலும் மெல்லிய கம்பளியால் சித்தம் செய்யப்பட்ட உடுப்புசிலாக்யம். வியர்வையை நமது தேகத்திலிருந்து ஆகர்ஷித்துக்கொள்ளவும், சிலவித நாற்றத்தை அவ்வாறே வாங்கிக்கொள்ளவும், ரோமத்தாலாகிய வஸ்திரங்களும் உடுப்புகளும் அதிகசக்தியுள்ளவைகள். பஞ்சு நூலாலாகிய வஸ்திரங்களைவிட இரட்டிப்புசக்தி ரோமத்தாலாகிய வஸ்திரங்களுக்குண்டு.

124. கம்பளி உடுப்பின் விசேஷம்.—விஷஜுரம் அதிகமாக விருக்கும் இடங்களில் பிளானல் உடுப்பு நமது தேகத்தை ஒட்டி போட்டுக்கொள்ளுவதால் அவ்விஷ ஜ்வரத்தை ஒருவாறு நாம் விலக்குகின்றோம். நமது நாட்டில் நாம் கெட்டியான பஞ்சுத் துணியாலாகிய உடுப்புகளை தரிப்பது நலமென்றும் அத்துணிகள் கொஞ்சம் வலைபோல் சிறு இடைவெளியுடன் செய்யப்பட்டிருந்தால் அவ்வமைப்பு எல்லாவிதத்திலும் சௌக்கியமென்றும் சொல்லப்படுகின்றது.

## X அத்தியாயம்

### நித்திரை

125. நித்திரை.—நித்திரை என்பது ஒவ்வொரு பிராணியினுடைய உயிருக்கும் உறுதியை யளிக்கும் ஓர் பெரும் ஊட்டம், கால் கை முதலிய உறுப்புகளிலிருக்கும் கீல்களுக்கு பலம் கொடுத்து அவைகள் தத்தம் தொழிலைச் செய்ய வலிமைகொடுப்பது தூக்கம்தான். பகல் முழுவதும் ஒருமனிதன் இவ்வுலகத்தில் உழைத்து எப்பொழுது இரவு வரும் தூங்கி சிரமம் தீர்த்துக்கொள்ளலாம் என்று இரவை எதிர்பார்க்கிறன். நித்திரைமட்டு மில்லாவிடில்மனிதன் மட்டுமல்ல எல்லாப்பிராணிகளும் தவிக்கும். சுவாசம், ஆகாரம், இவைகளைப்போல நித்திரையும் ஒவ்வொருவனுக்கும் வெகு அவசியம், ஏழையும் பணக்காரனும் ஏகரூபமாக நித்திரையை விரும்புகிறார்கள். நித்திரைக்குக்காலம் இரவு என்றும் வேலைக்குக்காலம் பகல் என்றும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவனும் தூங்கவேண்டிய அளவு அவனவன் படும் தேகசிரமத்தைச் சார்ந்திருக்கின்றது. குழந்தைகள் இரவும் பகலும் தூங்கும், இப்படி இரண்டு வருஷம் தூங்கினபிறகு குழந்தைகளுக்குப் பகல் நித்திரை போய்விடும். சாதாரணமாய். ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு எத்தனை நாழிகை தூங்க வேண்டும் என்பதை விசாரிப்போம்.

126. எத்தனை மணிதூங்கவேண்டும்?-ஒருவன் ஒருநாளைக்குக் குறைந்த பக்ஷம் 5-மணியாவது தூங்கவேண்டும். சிலர் ஏழுமணி நேரத்துக்குக்குறையாமல் தூங்கவேண்டு மென்று சொல்லுகிறார்கள். அவ்வளவு அவசியமல்ல. கிழவர்களும், ஏதாவது ஓர் விதநோயால் வருந்துகிறவர்களும் நோய்தீர்ந்து உடம்பு தேறுகிறவர்களும் அதிகத் தூக்கம் தூங்கவேண்டும். ஒவ்வொருவனுடையதொழிலுக்கும்வழக்கத்துக்கும் தக்கபடி அவன் தூங்கும் பிரமாணம் ஏற்பட்டிருக்கின்றது. பருத்த தேகமுள்ளவர்கள் அதிக மாமிசம் புசிக்கிறவர்களாயிருந்தால் 9-அல்லது 10-மணி நித்திரை செய்வார்கள். சக்குப்போல் ஒடின தேகமுள்ளவர்கள் அதிக தூக்கம் தூங்கார்கள்.

127. தூக்கம் தப்புவதால் விளையும்நோய்கள்.— தலைநோய், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல் இவைபோன்ற இரண்டுநோய்கள் தூக்கக்குறைவால் முதல் நம்மைப்பிடிக்கும். இவ்விதாரங்களை நாம் முதல் முதல் கவனித்து நாம்

அகற்றுமல் போனல் மண்டைக்சாய்ச்சல், பைத்தியம், சித்தபிரமை இவைபோன்ற ரோய்கள் விளையும்.

128. நல்லதூக்கம்.—அதிக தேகசிரமமும் அதிக புத்திசிரமமுமுள்ளவர்கள் அயர்ந்த தூக்கம் தூங்குவார்கள். ஆகையால் நாம் நமக்குவரும் தூக்கத்தைக்கொண்டு நமது தேகவியாயாமத்தின் ஏற்றத்தாழ்வை ஒருவாறு நிச்சயித்துக்கொள்ளவேண்டும். நல்ல தூக்கத்திற்கு நமது போஜனமும் ஒரு காரணம். நாம் இரவில் தூங்கப்போகும் முன்பாக வயிறுநிரம்ப புசிக்கக்கூடாது. கனத்த வயிற்றுடன் நாம் தூங்கும்பொழுது பயங்கரமானஸ்வப்னங்கள் உண்டாகின்றன. தூங்கச் செல்லும்பொழுது ஒருவிதக்கவலையும்வைத்துக்கொள்ளாமல் சுகமாய்ப்படுத்துக்கொண்டால்நமக்குத்தூக்கம்பிடிக்கும். நாம் தூங்கும் அறையில் காற்றோட்டம் நன்ருக விருக்கவேண்டும். சுகமாகத் தூங்க தலையைக் கொஞ்சம் உயரமானவிடத்தில்வைத்துக்கொள்ள வேண்டும். தலையணையை வைத்துக் கொள்ளுவதால் நாம் இவ்விதசுகத்தை ஒருவாறு அடைகின்றோம். சிலர் அதிகத் தலையணைகளை வைத்துக்கொண்டு தலையை அதிக உயரமாக அமைத்து நித்திரை செய்வார்கள். சிலர் கல்போன்றதலையணைகளை வைத்துக் கொள்ளுவார்கள். இவைகள் தேக சௌக்கியத்திற்கு வெகு குறைவு. கழுத்திலிருக்கும் நரம்புகள் வலிக்கும். சிலசமயத்தில் கழுத் தேசுளுக்கிக் கொள்ளும். நமது இடது பக்கத்தில் இருதய மிருக்கின்றதாகையால் இடது விலாபக்கமாகப்படுத்து வெகு நேரம் நாம் தூங்கக்கூடாது. அவ்வாறு நாம் தூங்குவோமேயானல் நமது தேகபாரம் முழுமையும் ஹிருதயத்தின் மேல் தாக்க நமது இரத்த ஓட்டம்கொஞ்சம் அவஸ்தைப்பட்டு நமக்குத் தூக்கத்தில் கனவை உண்டாக்கும். முதுகு எலும்புகளில் அதிக அழுத்தம் விழாதவண்ணம் மிருதுவான பஞ்சமெத்தைகள் அல்லது கம்பிகளாலாகிய தொய்யும் படுக்கைகள் இவைகளில்தூங்குவது ஆரோக்யம். தூங்கும்பொழுது வடதிசையில் தலைவைத்துக் கொள்ளக்கூடாது. அத்திசையில் காந்தமிருப்பதால் சில தேகங்களுக்கு ஒத்துக்கொள்ளாது என்றபடி நாம் தூங்கும் அறையில் விளக்கின் வெளிச்சமிருந்தால் தூக்கம் பிடிக்கமாட்டாதாகையால் வெளிச்சத்தை முற்றிலும் மறைத்தாவது அல்லது வெளிச்சமே யில்லாமலாவது நாம்தூங்கவேணடும்.

# குமார ஸம்பவம்

## BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது.

### IX அத்தியாயம்

தாமரை மலர்போல் வாசனைவீசும் சுவாசமமைந்த தனது முகத்தில் குளிருக்கு நடுங்கும் உதடு அத்தாமரையின் இதழை ஒத்திருந்த காரணத்தால் தாமரை ஓடையில் நின்று தவம்புரிந்த பார்வதி அவ்வோடை தாமரைமலரின் சோபையை பனிக்காலத்தாலிழந்திருந்த போதிலும் தாமரை மலரோடுகூடிய அழகுடன் விளங்குவதாகவே செய்தாள்.

28. மரத்திலிருந்து தானுகவே உதிரும் (பர்ணத்தை) சருகைப் புசித்துக்கொண்டு தவம்புரிவது வெகுமேன்மையான தவம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அச்சருகை (பர்ணத்தை)க்கூட பார்வதி தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டபடியால் அச்சங்கதியை யறிந்தபெரியவர்கள் * அக்காரணத்தால் பார்வதிக்கு அபர்ணை என்று பெயரிடலானுர்கள்.

29. தாமரைத்தண்டைவிட வெகு மெல்லியதான தனது மேனியை இவ்வண்ணமான தவங்களினுல் இரவும் பகலும் பார்வதி இளைக்கப்பண்ணிக்கொண்டு மாமுனிவர்கள் தங்களுடைய கடினமான தேகத்துடன் செய்யும் தவத்தையும் தனது தவத்துக்கு வெகு கீழ்ப்பட்டதாகப் பண்ணிவிட்டாள்.

30. இவ்விதமாய் பார்வதி தவம்புரிந்தபொழுது ஒருநாள் ஓர் பிரமசாரி மான்தோல் மேற் போர்த்து பலாசக் கொம்பு கைப்பற்றி கம்பீரமாகப் பேசிக்கொண்டு அந்தணர் காந்தி முகத்தில் விளங்க தலையில் சடைமின்ன பிரமசாரி ஆசிரமமே உருவெடுத்துவந்ததோஎன்று பார்ப்பவர்கள் திகைக்க அப்பார்வதியின் ஆச்சிரமத்துக்கு வந்தான்.

31. அதிதிகளுக்கு பூசைசெய்யக்கடமைப்பட்டிருந்த பார்வதி அவனுக்கு விதிப்படி வெகு மரியாதையாக பூஜைசெய்தாள். ஏனெனில் தங்கள் மனத்தை திடப்படுத்திக்கொண்ட பெரியவர்கள் தங்களைக்காண வருபவர்கள் தங்களைப்போன்றவர்கள் தான் என்றபோதிலும் தங்களை நாடிவருபவர்கள் தங்களைவிட பெரியவர்களென்றேநினைத்து விசேஷ மரியாதைகள் செய்வதேவழக்கம்.

* சருகைக்கூட புசிக்காமல் தவம்புரிந்தவள் என்றபடி

32. சாஸ்திரப்பிரகாரம் தவக்கு நடந்த மரியாதைகளை அப்பிரமசாரி ஏற்றுக்கொண்டு கொஞ்சநேரம் இளைப்பாறுவதாகக்காட்டி உமையை வெகு மரியாதையுடன் பார்த்து வரம்பைவிட்டு வழுக்காதவனாகிய அவன் பின்வருமாறு பேசலானான்.

33. அம்மணி! உமது தவத்தைச் சரிவரநடத்த உமக்கு தருப்பை பலாசக்குச்சி இவைகளிவ் விடத்தில் எளிதாகக் கிட்டுகின்றனவா? இவ்விடத்து ஜலம் நீங்கள் விதிப்பிரகாரம் ஸ்நாநம்செய்ய உமக்கு ஒத்திருக்கின்றதா? உமது சக்திக்குத்தக்கபடி அதிகமாயில்லாமல் வேண்டியமட்டும் நீங்கள் தவத்தை நடத்திவருகின்றீர்களா? அறத்தைச் சரிவரத்தேடிக்கொள்ள சரீரமன்றோ முதல் முதல் சௌக்கியமாகவிருக்கவேண்டும்?

34. நீங்கள் உமது கைகளால் ஜலத்தை எடுத்து அர்க்யமாகக் கொடுக்கும் நீரால் முளைத்த கொடிகள் நன்றாகத் தளிர்விட்டு விளங்குகின்றனவா? அத்தளிர்கள் தாம் வெகுநாளாக செங்குழம்புசீசாயம் காணாமலே தமது இயல்பான சிவப்பு நிறத்துடன் விளங்கும் உங்களுடைய உதட்டுக் காந்திக்கு ஒப்பானவைகளாக வேண்டுமல்லவா?

35. நீங்கள் கொடுக்கும் செல்வத்தால் உமது கையிலிருக்கும் தர்ப்பையைப் பிடித்திழுக்கும் மான்களிடம் உங்களுடைய அன்பு குறைவில்லாமலிருக்கின்றதா? தாமரை இதழ்போன்ற கண்களைப் பெற்றவளே! அம்மான்களன்றோ தங்களுடைய சஞ்சலமான கண்களால் உங்களுடைய கண்களைக்கொள்ளைகொண்டவைகள்போல் காணப்படுகின்றன.

36. பார்வதி! நல்ல உருவம் பாவமான காரியத்தில் ஒருபொழுதும் இறங்காது என்ற உலகச்சொல் அவ்வளவும் உண்மையே. விசாலமான கண்களைப் பெற்றவளே! உமது நல்லொழுக்கம் மாமுனிவர்களுக்கும் உபதேசம் செய்யும் உதாரணமாக விளங்குகின்றதல்லவா.

37. மாசற்ற உங்களுடைய ஒழுக்கத்தால் இமவான் எவ்வளவு பரிசுத்தியை தமது குடும்பத்துடன் அடைந்தாரோ அவ்வளவு பரிசுத்தத்தை ஸப்தரிஷிகள் பலியாக வாரியிறைக்கும் மலர்களால் சிரித்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய் ஓடிவந்துதம்மேல் விழும் கங்கையின் ஜலத்தாலும் அடையவில்லை.

38. பெருங்கருத்தமைந்தபாவாய்! உம்மைப் பார்த்தபிறகு அறம் பொருள் இன்பம் என்ற இம்மூன்றக்குள் அறந்தான்உயர்ந்தது என்று எனக்குத்தோன்றிவிட்டது; ஏனெனில் நீங்கள்பொருள்,இன்பம் இவைகளை உம்மிடத்திலிருந்து அகற்றி அறத்தைமட்டும் தழுவிவருகிறீர்களல்லவா?

39. நீங்கள்செய்த மேன்மையான மரியாதையை ஒப்புக்கொண்ட என்னை நீங்கள் ஏதோ அயலான் என்று கருதவேண்டாம். ஏனெனில் வணங்கிய மேனியுடன் விளங்கும் உத்தமியே, நட்பு * என்பது ஏழு பேச்சுகள் மட்டில் பேசும் மாத்திரத்தாலேயே உண்டாகின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

40. இவ்வளவு தூரம் பொறுத்துக் கொண்டு என் பேச்சைக் கேட்டு வரும் உத்தமியே, நான் இப்பொழுது நண்பனாய் விட்டபடியாலும் அந்தணன் என்ற காரணத்தால் எனக்கு இதைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்ற அவா உதித்திருக்கிறபடியாலும், நான் ஏதோ சில சங்கதி தங்களைக் கேட்கவேண்டுமென்றிருக்கின்றேன். அவைகளுக்கு மறுமொழி ரகஸியம் என்றிருக்காதபக்ஷத்தில் எனக்குத் தாங்கள் சொல்லவேண்டுகிறேன்.

41. முதல் பிரமாவாகிய (ஹிரண்ய கருப்பருடைய) வம்சத்தில் நீங்கள் பிறந்திருக்கின்றீர்கள். உங்களுடைய அழகோ இம்மூவுலகங்களுடைய அழகுகளையும் சேர்த்து உண்டுபண்ணப்பட்டது போலிருக்கின்றது. ஐசுவரியம் என்பது இனி நீங்கள் போய் தேடிக்கொள்ளாத வண்ணம் உங்களிடத்திலேயே அமைந்திருக்கிறது. உங்களுடைய பிராயமோ இளம்பிராயம். எல்லாமிவ்வண்ணமிருக்க இவைகளுக்குமேல் எவ்விதப்பயனை நாடி நீங்கள் தவம் புரின்றீர்கள். அதை எனக்குச் சொல்லவேண்டும்.

42. வெகு தைரியமுள்ள மடந்தைகள் தங்களால் தாளமுடியாத அபசாரம் தங்களுக்கு ஸம்பவித்தகாரணத்தால் இவ்வாறாக தவம்புரியப் புகுவார்கள். ஆனால் மெல்லிய இடையாய், ஏற்கனவே விசாரித்திருக்கும்விஷயங்களால் அவ்வண்ணம் உங்கள்விஷயத்தில் ஏதாவது அபசாரம் சம்பவித்திருப்பதாகத் தெரியவேயில்லை.

43. நற்கண்ணாய்! உமது உருவோ ஒருநாளும் சோகத்துக்கு ஏலாதது. தந்தை வீட்டில் உமக்கு என்ன அவமானம் நடந்திருக்கக்கூடும்! வேற்றாள் உமக்கு அவமானத்தைவிளைவித்திருப்பான் என்பது ஒருநாளுமில்லை. எவன் பாம்பின் கூரான இரத்தினஊசிபோன்றபல்லில் தனதுகையை அழுத்துவான்!

44. இவ்விளம்பிராயத்தில் நீங்கள் நகைகளணிவதைவிட்டு கிழத்தனத்துக்கு ஏற்றதாயிருக்கும் மரவுரி உடுத்தீர்கள். சாயங்காலத்தில் ஒளியுடன் பிரகாசிக்கும் சந்திரன் நட்சத்திரங்களிவைகளுடன் சோபிக்கும் இரவு விடியற்காலமாய் மாறுமோ?

45. தவத்தால் நீங்கள் தேவலோகத்தை அடைய விரும்புவதாகவிருந்தால் உங்களுடைய சிரமம் வீண் ஏனெனில் உங்களுடைய தந்தையின் இருப்பிடங்கள் அவ்வளவும் தேவபூமிகள். கணவன்வேண்டி

* ஆகையால் நான் உமது நண்பன் என்று அந்த பிரமசாரி எடுத்துக்காட்டியபடி.

யிருந்தால் அதற்கு தவம் என்னத்திற்கு? இரத்தினம் தன்னை ஒருவன் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று தானாகப் போய்த் தேடமாட்டாதே. அது தேடப்படுமென்றோ!

(இவ்வாறு பிரமசாரி சொல்லும்பொழுது பார்வதி பெருமூச்சுவிட)

46. தெரிந்தது நீங்கள்விடும் பெருமூச்சால் எனக்கு! ஆனால் என் மனத்திற்கு மட்டும் இன்னும் ஸந்தேகமே யிருக்கின்றது. நீங்கள்போய் பிரார்த்தித்துக் கொள்ளும்படியாக ஒருவனும் இருக்கவேமாட்டான். நீங்கள்பிரார்த்தித்துக்கொண்டும் உங்கள் பிரார்த்தனையை ஒப்புக் கொள்ளாதவன் எப்படியிருக்க முடியும்?

47. அடடா! நீங்கள் கருதும் அவ்விளைஞன் வெகு கடின சித்தமுள்ளவனா யிருக்கவேண்டும். ஏனெனில் வெகுகாலமாய் காதணியாகிய தாமரை வைக்கப்படாமல் சூனியமாக விளங்கும் உங்களுடைய காதுகளின் மேல் முதிர்ந்த நெற்கதிர்கள் போல் விலவிலப்பாகத் தொங்கும் உங்களுடைய சடைகளைப்பார்த்துக்கொண்டும் அவன் மனமிரங்காமலிருக்கின்றானன்றோ.

48. முனிவர்கள் செய்யும் விரதங்களைச் செய்வதால் மிகவும் வாடி நகைகள் பூட்டப்படவேண்டிய விடங்கள் எல்லாம் சூரிய கிரணங்களால் கறுத்து, பகற்காலத்தில் தோன்றிய சந்திர ரேகைபோல் உருமாறியிருக்கும் உங்களைப்பார்த்து எவன் மனது இரங்கவில்லையோ அவனுக்கு கருணையென்பது கொஞ்சமேனுமுண்டா!

49. நீங்கள் கருதியிருக்கும் காதலன்தான் அதிக அழகுள்ளவன் என்ற செருக்கால் மோசம் போயிருக்கவேண்டும் என்று நான் நினைக்கின்றேன். ஆகையால்தான் அவன் வளர்ந்த புருவங்கள் பெற்று அழகாய் விளங்கும் உங்கள் கண்களுக்கு முன்பாக வெகு நாளாகத் தனது முகத்தைக் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான்.

50. பார்வதி, இன்னும் எத்தனைநாள்தான் தவம் புரிந்து உங்களுடையதேகத்தை சிரமப்படுத்திக்கொள்ளுவதாக நீங்கள்கருதியிருக்கின்றீர்கள்? நான்என் முற்பிறப்பில் தேடிக்கொண்டதவம் என்னிடமிருக்கின்றது. அதில்பாதி நான்உங்களுக்குக் கொடுக்கிறேன், அதையும் கைப்பற்றி உங்களுடைய மனோரதத்தை சீக்கிரதில் நீங்கள் நிறைவேற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் ஆசைகொண்டிருக்கும் அந்நாயகன் பெயரைமட்டும் சொல்லுங்கள்."

51. இவ்வண்ணம் அவ்வந்தணன் பார்வதியின் மனத்திலிருந்தகருத்துக்குட் புகுந்து சொல்லவே பார்வதி தனதுகருத்தைத் தானாகச் சொல்லமுடியாதவளாக விருந்தாள். ஆனால் அவள் தனக்குச் சமீபத்திலிருந்த தோழியை மையைவிட்டு ஒழிந்த தனது கண்களைத்திருப்பிப் பார்த்தாள்.

## ✓சிறுவர்க்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

---

✓மனதின் ஸாதாரண நிலை.—மனது அடக்குவது மிகக் கஷ்டம். அதை மனக்குரங்கு என்று நன்றாகப் பெயரிட்டு அழைத்தனர். ஓர் குரங்கொன்றிருந்ததாம். அது ஸ்வபாவமாகவே மிகுந்த சஞ்சலத்தோடும் கூடியிருந்தது. இது போதாதென்று அது கள்ளுண்டுவிட்டதாம், பின்பு அதை ஓர் தேளும் கொட்டிவிட்டதாம். இதனால் குரங்கு குதித்துகொண்டு ஓடத்தொடங்க அது மிகுந்த கஷ்டத்தை அடைந்தது. இவைகளைப் பூர்த்திசெய்ய அதை ஓர் பிசாசம் பிடித்துக்கொண்டதாம். இக்குரங்கின் சஞ்சலம் இவ்வாறுதான் இருக்கும் என்று நம்மால் வர்ணிக்க முடியாது. இத்தகைய குரங்கிற்கு ஸமானம் ஸாதாரண மனிதரது மனது என்று ஞானிகள் கூறுவர். குரங்கைப்போலவே நமது மனதும் மிகுந்த சஞ்சலஸ்வபாவமுடையது. அது ஆசை எனும் கள்ளைக்குடித்து அலங்கோல திசையை யடைகின்றது. மற்றவர்களது ஆசை பூர்த்தியாவதைக்கண்டு உண்டாகும் பொறாமை என்ற தேள்கொட்ட மனது அதிகசஞ்சலத்தை அடைகின்றது. இப்படி இருக்கையில் மனம் எண்ணியவாறு காரியங்கள் பூர்த்தியானால் கர்வம் என்ற பேய்பிடிக்க அது முன்னிலும் பதின்மடங்கு அதிக சஞ்சலத்தை அடைகின்றது. இப்படிப்பட்ட மனதை அடக்குவது எவ்வாறு என்று கேட்ட அர்ச்சுனனுக்கு பகவான் 'வைராக்யம் (ஒருவனுக்குத் தெரிந்த அல்லது தெரியாத வெளிவஸ்துக்களின் விஷயத்தில் உண்டாகும் துச்சபுத்தி), அப்பியாஸம் (த்யானம் சென்றடையும் பரம்பொருளை, மனம் விட்டுப்போக அடிக்கடி அதை ஊக்கத்தோடு மனத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தல்) ஆகிய இவ்விருவிதத்தால் அலையும் மனதை நிலையில் நிறுத்தி ஸுகம் பெறலாம்' என்றார்.

* * *

✓மோனம் என்பது ஞானவரம்பு.—மூன்று ரிஷிகள் ஸ்வர்க்கம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். போகும் வழியில் ஓர் பருந்து பாம்பு ஒன்றை தூக்கிப்போவதைக் கண்டார்கள் அப்பொழுது ஒரு ரிஷி 'இதென்னதுக்கம்! இந்தப் பஞ்சையான பாம்பு அநியாயமாக இக்கொடிய பருந்தின் வாயிலகப்பட்டு வருந்துகின்றதே?' என்று சொல்லிப்பரிதவித்தார். உடனே அவர் பூமியைநோக்கி விழுந்துவிட்டார்.

இதைக்கண்ட மற்றொருரிஷி, 'இக்கொடிய பாம்பிற்கு இம் முடிவே தகுந்தது' என்று சொல்ல அவரும்கீழேவிழுந்துவிட்டார். மூன்றாம்ரிஷி, 'பிரபஞ்ச விசித்திரத்தின்நியாயந்யாயங்களை எடுத்துக் கூற நமக்கு என்ன வல்லமை இருக்கிறது? பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவராலேயே பரவப் பெற்றதாகிய இவ்வுலகில்நடக்கும் விஷயங்களை அநியாயம் என்று கூற நமக்கு அதிகாரமில்லை, நியாயம் என்று கூறவும் அதிகாரம் இல்லை. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது,' ஆகையால் நடப்பவைகளைக்கண்டு மனங்கோணாது பொறுமையுடன் இருத்தலே நமது கடமை' என்று மௌனமாக இருக்க யாதொரு கஷ்டமும் இன்றி ஸ்வர்க்கம் சென்றடைந்தார்.

* * *

அகங்காரம்.-முன்னொருகாலத்தில் வியாஸ பகவான் குருக்ஷேத்திரம் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் காலடிச் சத்தத்தைக்கேட்டு அவர் வரும்வழியில் இருந்த ஓர் புழு பயந்து வெகு வேகமாக நகர்ந்து ஒதுங்கிச் சென்றது. இதைக்கண்ட உடன் அவர் 'நாம் இந்த ஜந்துவை ஒரு பொருட்டாக எண்ணுகிறதில்லை. இது எவ்வளவு சிறிதாக நமக்குத் தோன்றியபோதிலும், இதற்கும் இதன் உயிர்வெல்லமாகவேதான் இருக்கின்றது! என்ன ஆச்சரியம்! பகவத்ஸ்ருஷ்டியின் மஹிமையே மஹிமை!' என்று வியந்துகொண்டு, தமது ஞான திருஷ்டியால் அந்த ஜந்துயார் என்று உற்றுநோக்கினார். அத்தியாச்சரியம்! மஹானாகிய நாரதரே அந்த ஜன்மம் அடைந்திருப்பதைக் கண்டார்! அப்பொழுது அந்தப்புழுவைநோக்கி, 'ஓ நாரதபகவானே! உமக்கு ஏன் இந்தத் தாழ்ந்த ஜன்மம் வந்தது? இந்த நிலையை அடைந்தபின்பு உமக்கு ஏன் இந்த ஜன்மத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற துர்ஆசை உண்டாகிறது?' என்றுகேட்டார். அதற்கு அந்தப்புழு, 'ஓ வ்யாஸபகவானே! ஓர்பாபம் செய்து நான் இந்த நிலைக்கு வந்து விட்டேன். பகவான் மாயையின்சக்தியைஎன்னென்றுசொல்லுவேன்! இந்த ஜன்மத்திலிருந்தபோதிலும் என்னைப்பற்றி எனக்கு சிறந்த அபிப்பிராயம்தான். என் ஸுகதுக்கங்களே எனக்குப் பெரிதாகிவிட்டன. உம்முடைய திருஷ்டிக்கு நான் மிகத்தாழ்ந்தவஸ்துவாகத் தோற்றியபோதிலும், எனக்கு என்னைப்பற்றி அம்மாதிரியான எண்ணமேகிடையாது. இதனால்தான் என் உயிர் எனக்கு வெல்லமாகஇருக்கின்றது,' என்றது. இம்மாதிரி ஓர்புழு தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் மனிதராகிய நம்மிடம் அகங்காரம் குடிகொண்டிருப்பது ஆச்சரியமா? அணுமுதல் அண்டங்கள் பரியந்தம் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வஸ்துக்களிலும் இந்த அகங்காரம் இருந்துகொண்டுதான் தொழிற்படுகின்றது. இந்த அகங்காரம் தான் பிரபஞ்ச வியாபாரம் எல்லாவற்றிற்கும் காரணம். இந்த அகங்காரம் எவ்வித தந்திரத்திலாகிலும் இந்தப் பிரபஞ்சத்தைவிட்டு நீக்கப்பட்டால், இதன் உண்மை உருவாம்பரம்பொருள் மாத்திரம் தான் தனித்து நிற்கும். இம் மூடமான அகங்காரத்தை அடக்கி அப்பாற்பட்டு நிற்றல் நம்மவருள் அநேகருக்குமுடியாது. ஆதலால்தான் பத்தரகிரியாரும்

'ஆங்காரமுள் அடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்'

என்று புலம்பினார்.

* * *

துக்கஹேது.—ஸம்ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ச்சுனனும் பகவானும் திரும்பி பதின் மூன்றாம்நாள் ஸாயங்காலம் வருகையில், அர்ச்சுனன் அபிமன்யு இறந்ததைக்கேள்விப்பட்டஉடன்தானும் இறப்பான் என்ற எண்ணம் பகவானுக்குவந்தது. உடனே வரும் வழியில் பகவான் தமது மாயாசக்தியால் அக்னியை வலம் வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு பிராமணன் அர்ச்சுனன் முன்தோன்றும்படி செய்தார். அப்பொழுது அர்ச்சுனன் பிராம்மணனிடம் இருந்து அவன் துக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்டு, 'உன் பிள்ளை இறந்தான் என்பதினால் நீ இவ்வாறு தற்கொலைசெய்து பாபத்தை ஸம்பாதித்துக்கொள்ளலாமா? மனிதனாக இருப்பவன் இவ்வளவு துக்கப்படுவது அழகன்று' என்றுஸமாதானப்படுத்தினான். அதற்கு பிராம்மணன் 'உன் பிள்ளை இறந்தால் உனக்கு வருத்தம் தெரியும். இப்பொழுது என்வருத்தம் எவ்வாறு உனக்குத் தெரியும்? ஆகையால்என்னை வீணாகத்தடுக்காதே! நான் இறக்கிறேன்' என்றுதீயின் அருகில் சென்றான் அப்பொழுது அர்ச்சுனன் 'என் பிள்ளை இறந்தால் நான் உன்னைப்போல துக்கத்தில் ஆழ்ந்து இறக்கமாட்டேன். நான்புருஷன் உன்னைப்போன்ற பெண்பிள்ளையல்ல' என்று சொல்லவும், பிராம்மணன் திரும்பி 'நீ இப்பொழுது சொல்லுவது உறுதிதானா? அப்படியாகில் ஸத்யம் செய். அப்படிச் செய்வாயாகில் நான் தீயில் மூழ்குவதில்லை' என்றான். அர்ச்சுனன் உடனே முன் பின் யோஜிக்காது' என் பிள்ளை இறந்தாலும் நான் கடவுள் ஸாக்ஷியாக உன்னைப்போல துக்கத்திற்கு ஆளாகமாட்டேன்' என்று வாக்குக் கொடுத்தான். உடனே பிராம்மணன் அக்கினிமுதலியன மறைந்தன, அர்ச்சுனன் ஸத்யம்மாத்திரம் தான் நின்றது. பகவான் அர்ச்சுனனை மிகுந்த ஆச்சரியத்தோடு ஏற இறங்கப் பார்த்தார். அர்ச்சுனன் ஒன்றும் அறியாதவனாகத் தன் படைவீடு வந்தான். உடனே அபிமன்யு இறந்ததைக்கேட்டு அக்கினியை வளர்த்து துக்கத்தால் அதில்விழ யத்தனம் செய்கையில், பகவான் அவன் எதிர்வந்து 'பிராம்மணனுக்கு ஒரு நியாயம் உனக்கு ஒரு நியாயமோ! இதென்னபேத புத்தியப்பா இது!' என்று அர்ச்சுனன் வழியில் செய்த சபதத்தை ஞாபகப்படுத்தினார். அவனுக்கு சோகம் அதிகமாக இருந்தபோதிலும் நமது வாக்குக்கு விரோதமாகநடக்க முயன்றோமே என்ற வெட்கத்தால் அவன் தனது துக்கத்தை மனதில் அடக்கி தீயில் மூழ்காதிருக்க வேண்டிவந்தது. இதனால் மமகாரமே துக்கத்திற்குக் காரணம் என்பது விளங்கும்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்

“ சின்னாள் நீ யிடர்தீராதாய்
இன்னலை கலி னெல்லோரும்
நன்னாள் காணுதநன் றன்றோ
உன்னால் நல்லற முண்டானால்.”

கம்பராமாயணம்.

உலகிற்கு ஒவ்வொருவரும் ஒரு அவஸர நிமித்தமாகத்தான் வந்திருக்கின்றனர். வீண்காலம்போக்க யாரும் பிறக்கவில்லை. உலக ஸ்வபாவத்தை உயர்த்தவேண்டும் என்றது தான் இந்த அவஸரத்தின் ஸ்வபாவம். இந்த ஸ்வபாவத்திற்காக எல்லாரும் பாடுபடவேண்டியது ஆவச்யகம். நான் எளியன் என்று சொல்பவன் உயிருடையவன் அல்ல என்னிடத்து வலிமை உள்ளது. அவ்வலிமையை எல்லார்மனதிலும் பிரவேசிக்கச் செய்யவும் என்னிடத்து வலிமையுள்ளது. இவ்வலிமை, மனோதிடம் இவற்றைக் கொண்டு அன்பாகிய கடலின் ஆனந்தத்தைக்கடைந்துஜன்ஸமூகத்தை உயர்த்தும் அமிருதத்தை அளிக்கும் வலிமை என்னிடமுள்ளது. அது பிறர்க்கு காண முடியாவிடினும் என் மனத்தில் லயித்துள்ளது. தர்மத்திற்காக என் ஆத்மாவை நிவேதனஞ் செய்வதுதான் எனது ஸ்வபாவமாகும். பலருடைய நன்மைக்காக நான் கஷ்டமடைவதுதான் நான் தர்மத்தை நிலை நாட்டப்பார்ப்பது. நான் ஆணாயிலென்ன? அன்றி பெண்ணாயிலென்ன? அதுவன்றி அலியா யிருப்பினுந்தான் என்ன? தர்மாவேசம் தலையேறிவிட்டால் அதன் வழிபடாமலிருக்க முடியுமோ? வழிபட்டு ஆனந்தமடையாமல்தான் இருக்கமுடியுமோ?

### 1. காடுசேர்ந்த கதை

ஜநகமஹாராஜன் யாகஞ் செய்வதற்காக அவனிட உழுதான்? அதிலென்ன ஆஸ்சரியம்! பூமியினவுண்டஇடத்தில் ஓர் பெண்குழந்தை துவா துவா வென்றுஅழுதது. அது தான் ஸீதை. பூமியைக்காப்பாற்ற வந்தவளிவள். பூமியினிடத்திலேயே உண்டானவள். அதனிடத்திலே அடையவந்தவள். அழகுங் குணமுங்கலந்து விளங்கி அவளது நடையையும் மொழியையும் சிறப்பிக்கச் செய்தன. வயதும் நிறைந்து பசந்தளிர்ப் பார்ப்பவர் கண்ணைப் பறிப்பதுபோல, கண்டவரிவளிடத் தயரும்படிச் செய்தது. பலநாள் காலங்கடந்தும் மணமாகவில்லை, ஓர் பாரவில்லை வளைத்தொடித்தவனல்லவா இவளை வரிக்கலாம். அவ்வில்லும் சிவபிரானுடைய தனுஸு. அதையும் அயோத்தி நகர்க்கு அரசன் தசரதன் மகனொடித்து முறித்தான்.

மணஞ்செய்துக்கொள்வது சிற்றின்பத்திற்காகவல்ல. உலகத்தையுயர்த்த தான்கொண்டநிலைமையின் முதல் வழியது. தன்னலமானது தன்னைப்பற்றி மாத்திரமன்றி தன் கணவனைப்பற்றியுங் கவலைகொள்ள வைட்டும் ஸாதனமது, பின் ஸந்ததிகளால் தன்னாசையானது கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து குழந்தைகளிடத்தும் கணவனிடத்தும், இவர்களின் மூலமாக தன்குலத்திற்காக பங்கிடப்பட்டு, கடைசியாக ஜனஸமுகத்தில் கலந்து விடுகிறது. விடவே, அந்த ஜனஸமூகத்தை உயர்த்தப் பிரவேசித்த உடன் தன்னாசை ஒழிந்து, அவ்வாசை அன்பாகி எல்லாரிடத்தும் பிரவஹிக்கும். இது தான் மணத்தின் கௌரவமான பெரியசெயல். இச்செயலை எண்ணித்தான் “ராமா! உனக்கென் குழந்தை ஸீதையை அளிக்கிறேன். உன் ஸுகதுக்கங்களுக்கும், உலகஸுகதுக்கங்களுக்கும், பங்காளியாக இருக்க இவளைக்கொள்” என்று சொல்லி ஸீதையை ராமருக்கு பாணிக்ரஹணம் செய்யஅளித்தனர் ஜனகர். இராமரும் “அப்படியே அவன் அருள் புரிவானாக!” என்றார். மணமாகி அயோத்தி நகரடைந்தனர் ஸீதை இராமர் தசரதர் முதலாகியோரெல்லாரும்.

ஸுகம்போல் கஷ்டம் வருவது ஸகஜம்தான். அவ்விதகஷ்டங்களை ஸுகமாகவே பாவித்து நாம் நடப்பது நமதுமனோநிலைமையை உயர்த்தும். மனம் மாறிவிட்டால்பின் நமக்கு ஸுகம்துக்கம் இரண்டும் இருப்பதாக படவேமாட்டாது. நமக்கு கஷ்டத்தை உண்டாக்குபவரிடத்தில் அன்புகொண்டு அவரே நமது நிலைமையை உயர்த்தவந்தவர்களாக எண்ணி அவன் ஒருவன்மேல் முழுமனத்தையும் செலுத்தி வாழ்வது தான் நமது வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் வாழ விரும்புவர், கஷ்டமுண்டாகும்,

ஸுகம் கிடைக்காது, என்றெண்ணவே கூடாது. கஷ்டமில்லாமல் ஸுகமெப்படி கிடைக்கும்? உலகத்தை உயர்த்தவேண்டுமென்ற பேராவலைக்கொண்டு, கஷ்டப்பட முடியாதென்று சொல்வதில் என்ன ப்ரயோஜனம்? அதனால்தான் தெரிந்த பெரியோர் எல்லாம் தன்னையே தர்மயாகத்திற்கு ஆஹுதியாக அளிக்கவேண்டும் என்றார்கள். இதை மனத்திற்கொண்டுதான் பெரியோரெல்லாம் நடக்க வேண்டியது.

தசரதர் தன் மகன் ஸ்ரீராமனுக்கு முடிசூட்டப் பிரயத்தினஞ் செய்தார். மந்திரிகளோடு ஆராய்ச்சி செய்தனர். தசரதற்கு நான்கு குமாரர்கள். முதல் மனைவியிடத்து இராமனும் இரண்டாம்மனைவியிடத்தில் லக்ஷ்மணனும் சத்ருக்நனும் மூன்றுமனைவியிடத்து பரதன் என்னு மகனுந்தான் அவர்கள். பரதன் தாய் கேகயநாட்டரசன் மகள். அவளுக்கு கைகேயீ என்று பெயர். இவள் ராமபட்டாபிஷேகமாகப் போகிறதென்று கேள்விப்பட்டாள். ஜனங்களெல்லாம் ஆவலோடு விரும்புகிறார்கள் என்றும் அவளுக்குத் தெரிந்தது. மந்திரிகளும் அவலம்பித்த விஷயமென்று மவளறிந்தாள். தனக்கும் ப்ரியமான விஷயமென்றும் பேராவல் கொண்டாள். மகிழ்ச்சியிலாழ்ந்திருந்தனள்.

நன்மையில் ஆனந்தப்படுவது ஸகஜம் அது நன்மையின் ஸ்வபாவமுமாகிறது. இதைத் தடுத்தானந்தமடைவது கீழ்மையின்ஸ்பாவம் அதை கீழ்மையுண்டாகும்படிசெய்து விடினும் அவர்க்கே நன்மையுண்டாகச் செய்வது அன்பின் வழி. அதற்கு பகை என்பதுங்கிடையாது: பகைவனுக்கு அன்பையளித்து அவனிடற்றன்பு செழிக்கும்படிச் செய்வதே அன்பின் ஸ்வபாவம் ஆகிறது.

கைகேயிடத்தில் ஒருவேலைக்காரியுண்டு. மந்தரை, அவள் ஒரு கூனி. அவளுடல்போலவே மனமும் அழகற்றது. அவர் இராமருக்கு பட்டாபிஷேகம் நடக்கப் போகிறதென்பதைக் கேள்வியுற்றாள். அம்மா! உன்குழந்தை இருக்க இராமனுக்கு பட்டாபிஷேகம் நடப்பதை நீர் பார்ப்பது தகுதியா? உன்மகனுக்கு அரசுவேண்டாமோ? நீ என்ன சொல்லியபோதிலும் நான் கேட்கமாட்டேன். முன்பே உமக்கு உமது கணவர் இரண்டு வரங்கள் கொடுக்கிறதாக வாக்களித்திருக்கின்றனர். ஒன்று பரதனுக்கு பட்டாபிஷேகம் வேண்டும்; மற்றொன்று இராமன் காட்டிற்கு போகவேண்டும்; என்று கேள். இராமனிங்கிருக்கக்கூடாது" என்று மாயாவிமந்தரைசொல்ல மயங்கி "ஓம்" என்றுவிட்டாள் கைகேயி.

சில ஸமயங்களில் நாம் எங்கு நமக்கு ஸுகம் உண்டாகும் என்று மனத்தில் உறுதியோடு இருப்பமோ அவ்விடத்தில் அநேக ஸங்கடங்களுண்டாக இடமுண்டாகும். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தல் ஸகஜமே. ஆயினுமானந்த மடைய வேண்டுமென்று சென்று துன்பம் அடைவது மனத்திற்கு மிக்க துன்பமளிக்கும். பெரியோர் இவைகளை பொறுக்கமாட்டார். அவர் உயிர்கூட இழந்துவிடுவர். அதேவிதமே கைகேயீ தசரதர்க்கு தன் விருப்பத்தைக் கூறினள். வாக்குத்தவறுதவர் என்ன செய்வார். மூர்ச்சையாய் விழுந்தார். விழுந்தவர் விழுந்தரே! இராமனும் தன் தகப்பனைத் தேட வந்தான். "அடா இராமா! நீ காட்டிற்கு சென்று பதினுன்கு வருஷமிருந்து வா, என் பரதன் தான் நாட்டிற்கரசன். இது உமது தகப்பனார் மொழி. அப்படியே செய்வாயாகவென்றாள்." "ஆகட்டும்" என்று உடனே புறப்பட்டுவிட்டார்.

மனைவி ஸஹதர்மிணி. கணவன் செய்யும்வேலையில் உதவிசெய்வதுதான் அவள் தர்மம். அந்த தர்மத்தில் ஸரியாக ஒழுகுவதினால்தான் அவள் உலகத்திற்கு பயோகமாவது. ஆத்மநிவேதனம் புரிய அது தான் முதல்வழி. நாட்டிலிருக்கும் ஸுகத்தையும் காட்டிலிருக்குந் துக்கத்தையும் கணிசியாது கணவனோடே இருந்து அவனுக்குதவியாக வேண்டுவது தான் அவள் ஒழுக்கத்தின்வழி. இவ்வழி உலக அபிவிருத்திக்கு முதல்படியாகிறது. அவள் ஸந்ததியில் அக்குணமே நிறைந்தோங்கு மாகையால்.

காட்டிற்கு புறப்பட்டுவிட்டார் இராமர். ஸீதையைக்கண்டார் "நீ இங்கையே இரு. நான் சிலநாள்களில் வந்துவிடுவேன். பதினுன்குவருஷம் சீக்கிரம் கழிந்துவிடும். ஸரியாக இரு" என்றவளிடம் சொல்ல உம்மை விட்டிருக்க எனக்கு நியாயம்கிடையாது. காட்டிற்கு நானும் வருவேன்" என்றாள் ஸீதை. காட்டையடைந்து கங்கையைக் கடந்து சித்ரகூட பர்வதத்திலிருவரும்இளவலாகிய இலக்ஷ்மணனுமிருக்கின்றனர். பரதனங்குவந்து இராமர்காலில் விழுந்து தன் தாய்செய்த வஞ்சனையைப் பொறுக்கும்படி வேண்டிக்கொண்டான். தன்தமையன் பாதுகையைத் தலைமேல்தாங்கிக்கொண்டுபோய் மகுடாபிஷேகஞ் செய்வித்து அயோத்தியில் வாழ்ந்தான்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

### பருத்திக்கோட்டை எண்ணெய்

---

கல்கத்தாவிலிருக்கும் அமெரிகன் கான்ஸல் ஜெனரலாகிய மைகேலவர்கள் (W. H. Michael) சிறிது நாள் முன்பு எழுதிய பிரசுரத்தில் இந்தியாவில் பருத்திக்கொட்டையிலிருந்து சாப்பிடக்கூடிய கொழுப்பு உற்பத்தியைப்பற்றிச் சிறிது விவரித்தெழுதியிருக்கிறார். சென்ற இரண்டு வருஷங்களுக்குள்ளாக நெய்யின் விலை இரண்டேகால் பங்குக்கதிகமாய் ஏறியிருக்கிறது. இதனால் இதற்குமுன் வாங்கிக்கொண்டிருந்த ஏழை ஜனங்கள் இப்பொழுது வாங்கக்கூடாமல் போய்விட்டது. சென்றவருஷம் 600-லக்ஷம் ரூபாய் விலையுள்ள நெய் உற்பத்தியாக்கப்பட்டது. ஆகையால் இந்தியர்களுக்கு வேண்டிய பசுவின் பாலிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யோ அல்லது அதைப்போலிருக்கப்பட்ட நெய்யோ இது உண்டுபண்ண என்ன செய்கிறது? மிருகங்களின் கொழுப்பிலிருந்து உற்பத்தியாக்கப்பட்ட நெய்யைப்பற்றி யோஜிப்பதில் பிரயோஜனமில்லை. ஆகையால் பருத்திக்கொட்டையிலிருந்து உண்டாக்கப்பட்ட நெய் நல்ல உபயோகமாயிருக்கும். இந்தியாவிலேயே நெய் வெகு அதிகமாய் உண்டாக்கப்படுகிறது. விலையதிகமான 2-வருஷத்திற்குமுன் வெண்ணெயின் விலையைவிட கால் பங்கு அதிகத்திற்கு நெய் விற்கப்பட்டு வந்தது. இந்தியாவில் சிலவிடங்களில் வெண்ணெய் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் ஹிந்துக்களுக்கு அதுவும் தென்னிந்தியாவில் வெண்ணையைவிட நெய்தான் பிரதானம். நெய் உண்டாக்க வெண்ணையை நன்றாய் பொங்கவைத்து அதிலிருந்து நீர்பண்டங்கள் ஆவியாய் போகும்படியாய் காய்ச்சப்படுகிறது. காய்ச்சப்பட்ட வெண்ணையை நீராயிருக்கும்பொழுது வெகு சுத்தமாயிருக்கும் அப்பொழுது அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைத்து குளிரவைக்கப்படுகிறது. குளிர்ந்தவுடன் அது உறைந்து மணல்மணலாயிருக்கும். நன்றாய் காய்ச்சப்பட்டால் அது ஒருவித கெட்டவாசனையுமில்லாமல் வெகுகாலமிருக்கும். நெய் நூற்றாண்டுகளுக்கு கெட்டுப்போகாமல் கார்க்கப்படுகிறது. 1876-7-வருஷத்திற்கு முன் 500-டன் நெய் ஆசியா கண்டத்தில் கீழ்பாகத்திற்கும் தென்பாகத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. 1879-80-வருஷத்தில் 1,236,433-ராத்தல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1907-08-வருஷம் இந்தியாவில் மாத்திரம் 406, 555-ராத்தல் நெய் இறக்குமதி செய்யப்பட்டது. 4,222,507-ராத்தல் இதர ஸ்தலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. விலை யதிகமாயிருக்கிறதைப் பார்த்தால் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்குறைவாய்த்தான் அகப்படுகிறதென்று தெரியவருகிறது. பருத்திக்கொட்டையிலிருந்து நெய் உற்பத்தியாக்க பம்பாயிலுள்ள இந்திய முதலாளிகள் முயற்சியெடுக்கிறதாக தெரியவருகிறது. அவர்கள் இவ்விதம் உற்பத்தியாக்க எவ்வித யந்திரம் உயர்ந்து எவ்விதமாய் உற்பத்தியாக்கலாம் என்று யோஜித்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் கை தேர்ந்த ஒரு நிபுணனை இச்சாலைத்தலைவராய் நியமிக்கப்போகிறார்கள். இதனால் ஐக்கிய நாடுகளில், பருத்திகொட்டையிலிருந்து உண்டாக்கப்படும் வெண்ணை இந்தியாவில் நல்ல வியாபாரமாகுமென்று தெரியவருகிறது.

### ஓர் புதிய நூல்

ஆஸ்ட்ரேலியா தேசத்தில் ஸமுத்திரக்கரை யோரத்தில் ஓர்வித புல் ஏராளமாய் உற்பத்தியாகிறதாம். இப்புல்லிலிருந்து உண்டாகும் நூல், பருத்தி நூலைவிட சேர்த்தியானதாயும், அதற்கு பதிலாய் கம்பளி நூலில் கலந்து நெய்வதற்கு ரொம்ப உபயோகமானதென்றும் சொல்லுகிறார்கள். சிறிதுநாள் முன்கம்பளியில் பருத்தி நூலைக்கலந்து நெய்பவர்களில் சிலர் ஒருசாலையில் வந்து பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அச்சாலைத்தலைவர் இப்புல்லிலிருந்து எடுக்கப்பட்ட நூலுடன் கம்பளி நூலைக்கலந்து நெய்யப்பட்ட கம்பிளித் துணியைக் காட்டும்பொழுது அது வெகு சேர்த்தியாயிருந்ததாம் இப்பொழுது 2,140,000டன் நூல் கொடுக்கக்கூடிய புல் ஓர் இடத்தில் இருக்கிறதாம். இது கடையில் சுமார் ரூ 35-க்கு விற்கப்படும். இன்னால் ராத்தல்ஒன்றுக்கு 3-அணாவாகவும் டன் ஒன்றுக்கு ரூ 420-இருக்குமாம். ஆனால் ராத்தல் 1-அணாவுக்கு விற்றாலும் ஏராளமான லாபம்கிடைக்கக்கூடியதாம்

### குண்டூசி செய்தல்

முதலாளிகள் கவனித்து தங்கள் பணத்தை சில வழிக்கும் வழிகளில் குண்டூசி செய்தல் முக்கியமானது. கம்பிகள் தனியாய் வாங்கினால் இதற்கு பெரியதாயும், கடினமாயுமுள்ள யந்திரங்கள் வேண்டிய

தில்லை. எருக் கம்பிகள் கடைகளில், மாதிரிக்கும் எண்ணிக்கைகளுக்கும் தகுந்தபடிடன் ரூ 320முதல் ரூ 540 வரையில் வாங்கலாம். பருமனுக்குத் தகுந்தபடி ஒருகிலோ ($2\frac{1}{5}$-ராத்தல்) வீலிருந்து 8000 முதல் 10,000 ஊசிகள் செய்யலாம், கொஞ்சங்கூட சேதமிருது. இவ்வேலைக்கு கோர்க்கும் யந்திரம் 2 இவ்விதத்தில் வேலைசெய்பவர்கள் 6,நல்லகம்பிகள் வேண்டும். 1 மனிதன் 150 முதல் 160 ஊசிகள்வரைக்கும் செய்யலாம். ஆறு மனிதர்களும் 2 யந்திரங்களும் ஒரு நாளுக்கு 5,40,000 ஊசிகள் செய்யலாம். யந்திரங்கள் கடிதங்களில் வரிசை வரிசையாக வரிசைக்கு 20, 30, 40 ஊசிகள் கோர்த்துவைக்கும். 6 குதிரை பலமுள்ள இஞ்சின் (Engine) வேண்டிய ராட்டணங்கள், பலகைகள் முதலானதுகள்தான் இக்கைத்தொழிலுக்கு வேண்டியவை. குண்டூசி செய்வதற்குசிலவாகும் பணம் சற்றேறக்குறைய ரூ. 10,000 தான்.

## ஐக்கியமாகாணங்களில் சர்க்கரை உற்பத்தி

கான்பகதுர் S.M. ஹாடி அவர்கள் அலகாபாத்தில் 1907ம் வருஷத்தில் நடந்த இண்டஸ்ட்ரியல் கான்பரன்ஸில் சர்க்கரை உற்பத்தியைப் பிழைப்பிப்பதைப் பற்றி வாசித்த உபன்னியாஸத்திற்குப் பிறகு சர்க்கரை உற்பத்தி செய்யும்பொருட்டு சில யந்திரங்களும் ரஸாயனபதார்த்தங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இது உத்தமமானவழி. சர்க்கரையை சுத்திசெய்பவர்களுக்கு இது ஒரு தூண்டுதலாயிருக்கிறது. ஆனால் அதிக சிலவில்லாமல் சர்க்கரையுண்டுபண்ண வேணுமானல் கரும்பிலிருந்துதான் எடுக்கவேணும். கருப்பஞ்சாலையில் எப்பொழுதும் வேலையிருக்கவேணுமானல் கரும்புதோட்டங்கள் ஏராளமாயிருக்கவேண்டும். இவ்விதமான சாலையொன்று இத்தேசத்தில் ஏற்படுத்த சிலகனவான்கள் முயற்சியெடுத்திருக்கிறார்கள். வெகு நேர்த்தியான சர்க்கரை இச்சாலையில் (12மணி நேரம் வேலைசெய்யும்) நாள் ஒன்றுக்கு 3முதல் 4டன் வரைக்கும் உற்பத்தியாக்கப்படுமோம். மிருகங்களிலிருந்து எடுக்கப்படும் கரிகளும் மற்றக் கெடுதலானசாமான்களும் உபயோகப் படுத்தப்போகிறதில்லை. ஆகையால் இச்சர்க்கரை வெகு நேர்த்தியாயிருக்கும்.

## அனகபள்ளி பென்ஸில் சாலை

சென்றமாதம் அனகபள்ளி பென்ஸில் சாலைமுதல் முதல் பரீக்ஷைக்காக வேலை ஆரம்பிக்கப்பட்டது. அநேகம்பேர் கூடியிருந்தார்கள். யந்திரத்திலிருந்து வேகமாய் ஓடிவருகிற எழுதும் ஈயதுண்டுகளைப்பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஜெபானிலிருக்கும் நாகடானி பென்ஸில் சாலையிலிருந்த ஷீ அவர்கள் இச்சாலைத் தலைவராய் நியமிக்கப்பட்டு அவர் அவ்விடம் வந்திருந்தார்.

## நிலம் உழுதல்—ஓர் புதுமாதிரி

இந்தியாவில் பயிர் வளரவேண்டுமானல் அதற்குத் தகுந்தபடி மழைவேண்டும். மழை இல்லாமல் போனல்வேறு எவ்விதத்திலாவது தண்ணீர் பாய்ச்சவேண்டும். கால்வாய்களோ அல்லது கிணறுகளோ இல்லாமல்போனல் பயிர் நஷ்டந்தான். இதனல் கருப்புண்டாகும் அநேக ஜனங்கள் மிருகங்கள் இறந்துவிடுவார்கள். கொஞ்சம் மழையைக்கொண்டுஎப்படி பயிர் விருத்திசெய்கிறதென்பது இந்தியாவிலுள்ள பயிரிடுவோர்கள் கவனிக்கவேண்டியதுதான். இதற்கு ஐக்கிய நாடுகளைப் பார்த்தால் தெரியும். இவ்வித உழவுக்கு 3-வழிகளுண்டு. பிரத்தியேகமான பயிர்; தண்ணீர் பாய்ச்சுதல் அல்லது கிணறுகளிலிருந்து இறைத்தல்; புதுமாதிரியாய் உழுதல். மூன்றுவது சொன்னது இந்தியாவுக்கு நூதனமானது. வெகுஆழமாய் உழுது மேல்பூமியை பயிரிடும் நாட்களிலும் அதற்குமுன்னும் செவ்வையாய் உழவேண்டும். ஏனென்றல் கொஞ்சம் மழை பெய்தாலும் பனிபெய்தாலும் அதன் ஈரமானது பூமி பாதையில்லாமலிருந்தால் நிலத்திற்குள் சென்று இந்த ஈரம் உலராதபடி நல்ல புழுதியுண்டாகும். உழும்பொழுதுண்டாகும் சிறு கால்வாய்கள் காற்றேட்டத்துக்கு குறுக்காயிருக்கவேண்டும். ஆனல் இந்தியாவிலும் இந்தியாவிலுள்ள பேதமையான பயிரிடுவோர்களாலும்இது செய்யவேண்டுமானல் பிரத்தியேகமான யந்திரமும், நீராவிக் கலப்பைகளும் விதைகளை ஒரிடத்தில் விதைக்கும் யந்திரமும்வேண்டும் வருஷத்தில் 15-அங்குலத்துக்குக் குறைந்தமழையுடன் 12-அங்குல ஆழத்துக்கு உழுது 35-புஷல் கோதுமையும் 50-புஷல் நெல்லும் நல்லலாபம்கிடைக்கத்தக்க பழங்களும் எடுத்ததாக அமெரிக்காவிலுள்ள பயிரிடுவோர்களில் ஒருவன் சொல்லுகிறான். ஆகையால்தான் நிலத்துக்கு விலையதிகமாய்விட்டது. 3-வருஷத்துக்கு முன் 2-டாலருக்கு வாங்குவோரில்லாமலிருந்த நிலம் தற்காலத்தில் 25 டாலருக்கு கிடைப்பதறிதாயிருக்கிறது இவ்வகை உழுதல் ஏழை பயிரிடுவோர்களால் முடியுமென்பது ஸந்தேகம் மிக தனிகர்களான ஜமீன்தார் முதலானவர்கள் இதை பரீக்ஷித்துப்பார்த்து தங்கள் நிலங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரலாம்

## அறிவிப்பு

இச்சஞ்சிகையின் முகப்படம் (Title page) தயார் செய்யுங்காலத்தில் மப்பும் மந்தாரமுமாய் சூரிய வெளிச்சம் மட்டாயிருந்ததால் படம் எடுக்கமுடியாமல் தவக்கப்பட்டது. அதனல் சஞ்சிகை வெளிவரத் தாமதமாயிற்று. தயவுசெய்து மன்னிக்கும்படி சந்தாதார்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## NOTICE

We regret the delay in the publication of this issue and we beg to state that such delays will not occur in future.

*Publishers.*

## இதரத்தமிழ் புத்தகங்கள்

அனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ... 0 8 0

போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்ருய் அச்சிடப்பட்டிருக்கிறது. ... ... 1 8 0

மதிகெட்ட மனைவி ... 1 0 0
தீனதயாளு ... 0 12 0
ஸ்ரீ மாயிகொலுவிருக்கை ... 0 8 0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு 0 8 0
வேணீ ஸம்ஹாரம் ... 0 3 0
மிருச்சகடி ... 0 4 0
முத்திராராக்ஷஸம் ... 0 4 0

ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.

லீலாவதி ஸுலோசன 0 12 0
இரண்டு நண்பர்கள் 0 12 0
மனோஹரன் 0 12 0
கள்வர் தலைவன் 0 8 0
சாரங்கதரன் 0 8 0
சத்ருஜித் 0 12 0
யயாதி 0 8 0
வேதாள உலோகம் ... ... 0 8 0
அமலாதித்யன் ... ... 1 0 0
காதலர் கண்கள் ... ... 0 12 0

வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ... 0 8 0
வெனிஸ்வர்த்தகன் ... ... 1 0 0
கற்புகரசி ... ... ... 0 8 0
குணமாலிகை அல்லது சற்பின் வன்மை 0 6 0
கனகவல்லி ... ... ... 1 0 0
கமலினிகலஹம்ஸம் ... ... 0 8 0
எலேன் ... ... ... 0 6 0
வசீகரி ... ... ... 1 0 0
ஞானாஞ்சனி ... ... ... 0 8 0
ஸுஜாதா ... ... ... 0 8 0
லலிதாங்கி ... ... ... 0 8 0
வனஸுதா ... ... 0 8 0
லலிதா ... ... ... 0 10 0
தமயந்தி ... ... ... 0 9 0
ஞானம்பாள் ... ... ... 0 6 0
மங்களாம்பாள் ... ... ... 0 8 0
கோமளம் காஞ்சியாத்திரை ... ... 0 8 0
சுகுணங்கதன் ... ... ... 0 12 0
பாவலர் விருந்து (முதல் காள்) ... 0 8 0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச சருக்கம் ... ... ... 0 8 0
மதிவாணன் ... ... ... 0 8 0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ... 0 8 0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜீவிய சரிதம் ... ... 0 8 0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ... 0 3 0
அந்தப்புர ரகசியம் ... ... 1 0 0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம் ... ... ... 1 0 0
மோகனங்கி ... ... ... 1 4 0
குடும்ப ஸம்ரக்ஷணி ... ... 2 0 0
மன்மதகாந்தன் கதை ... ... 0 8 0
இந்து பாகசாஸ்திரம் ... ... 2 0 0
மகாமகம் அதின் மகிமை ... ... 0 4 0
ஸ்ரீ தாதாபாய் கௌரோஜியின் ஜீவிய சரிதம் ... ... ... 2 0 0
கந்தபுருணச் சுருக்கம் வசனம் ... 0 12 0

ரம்யனும் ஜோலிதையும் ஆங்கிலேய கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ரோமியோ அண்டு ஜுலியட் நாடகத்தின் தமிழ் அமைப்பு (ஓர் புதிய நாடகம்) 0 8 0

"மானிட மர்ம சாஸ்திரம்" அரிய பெரிய காரியங்க ளொவ்வொன்றையும் விளக்கிக்காட்டும் சித்திரப்படங்கள் 200 அடங்கியது. விலை ரூ. 5. தபாற்சிலவு பிரத்தியேகம் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 8 ஷி.

### 1908-ஒ௵ 1-வது ஆக்ட்
### பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய
### சென்னபட்டணம் 1908-ஒ௵ ஆக்ட்
### (தமிழ்)

டெம்மி, 8-பேஜ்சைஸில் திடமானகிளேஸ் காகிதத்தில், தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் காப்பி 1-க்கு விலை அ௵ 0 8 0.
தமிழ்க் காப்பி 1-க்கு விலை அணு 6.
தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இந்தப் புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசிய மிருக்கவேண்டியது.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி
மைலாபூர், மதருஸ்.

## மஹாபாரதம்
## சாந்திபர்வம்

கும்பகோணம்

பிரம்மஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால் எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட்டு, பிழையறப் பரிசோதித்து நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்ருய் பயிண்டு செய்திருக்கிறது. இப்பொழுது தயாராயிருக்கும்

| | | |
|---|---|---|
| 1-ம் பாகம் ... ... | ரூ. | 2 0 0 |
| அச்சிலிருக்கிற 2-ம் பாகம் ... | | 2 0 0 |
| இப்பொழுதே இரண்டாம் பாகத்துக்கும் சேர்த்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு ... ... ... | | 3 0 0 |

## ஸ்ரீமத் வால்மீகிராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளியநடையில் வசனரூபமாய் இவ்வால்மீகிராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது, இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, செவ்வையாய் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

### தயாராயிருக்கும் காண்டங்கள்

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் ... ... | ரூபாய். | 1 12 0 |
| அயோத்தியாகாண்டம் ... | ,, | 3 0 0 |
| ஆரணியகாண்டம் ... ... | ,, | 1 12 0 |
| கிஷ்கிந்தாகாண்டம்... ... | ,, | 1 12 0 |

மற்றைய காண்டங்கள், இப்பொழுது விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

### இதரத் தமிழ்ப்புத்தகங்கள்

நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம் ... ... ... 3 0 0

இப்பதிப்பில் (1) சம்மந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப்பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலாயிர திவ்யப்பிரபந்தம்.—640 பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும், (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்து பலபிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

| | |
|---|---|
| மனுதர்மசாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும்—560 பக்கம் ... ... | 2 4 0 |
| ஸ்திரீ புருஷசாமுத்ரிகாலட்சணம் ... | 1 0 0 |

### வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்

| | |
|---|---|
| வாசுதேவ மனனம் ... ... ... | 1 0 0 |
| சிவபோகசாரம் & சிவஞான விளக்கம் | 0 2 0 |
| சுகர் கைவல்லியம் ... ... ... | 0 2 0 |
| வைராக்கிய சதகம் ... ... ... | 0 2 0 |
| ஞன்மார்க்கம் (அல்லது இராமதாசர் உபவள்ளலார் சாஸ்திரம்) ... ... | 1 8 0 |
| மகாராஜா துறவு ... ... ... | 0 6 0 |
| தாயுமானவர் பாடல் ... ... ... | 0 12 0 |
| வேதாந்தபோதினி ... ... ... | 0 8 0 |

யசோதரகாவ்யம்.—இது தமிழில் சிறந்த ஐந்து காவியங்களில் முதலாவது. ஜயினமுனிவர் பாடியது. ம-ா-ா-ஸ்ரீ, பண்டித வெங்கிடராமய்யங்கார் அவர்கள் இயற்றியது. ... விலை அணா 8.

பீமலா.—அல்லது திவான்மகள். (ஆக்பர் சக்கரவர்த்தி காலத்தில் நடந்த ஓர் சரிதை. ம-ா-ா-ஸ்ரீ R.P. குலந்தசாமி, B.A.,L.T., அவர்களால் இயற்றப்பட்டது. ... ... விலை அணா 6.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மைலாபூர், மதராஸ்.




## "விவேக போதினி"

### ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

### இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை.
2. உலக ஒழுக்கங்கள்.
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
4. வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம்.
5. தக்கவர்களைக்கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்.
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்.
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரவித்திபெற்றவர்களும், உலக அனுபவ முள்ளவர்களும் மிகவும் இனிய செந்தமிழ்நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25உ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

| | | | |
|---|---|---|---|
| இந்தியா, பர்மா, ஸிலோன் ... | 3 | 0 | 0 |
| பினுங்கு, சிங்கப்பூர், நேட்டால் வகையரா இடங்களுக்கு ... | 4 | 8 | 0 |
| தனிப்பிரதி ... ... | 0 | 5 | 0 |

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை.

## விவசாயபோதினி

அவசியம் குடித்தனக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஓர் அருமையான புத்தகம். அநேக சித்திரப்படங்களுடன் கூடியது.—

இப்புத்தகத்தில் நிலங்கள் சம்பந்தமான விஷயங்களும், கருவிகள் எருக்கள் சம்பந்தமான சாஸ்திர நுட்பங்களும், சகலவித நன்செய், புன்செய் தோட்டக்கால் பயிர்களின் சாகுபடிகளும் விவசாய சீர்திருத்தத்திற்கு வேண்டிய முக்கிய சாதனங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

கனம் மாஜிஹைகோர்ட் ஜட்ஜ் சுப்பிரமணிய அய்யர், திவான் பஹதூர் ரெகுநாதராவ், கனம் P. S. சிவஸ்வாமி அய்யர், விவசாய காலேஜ் உதவி தலைமை உபாத்தியாயர், சைதாபேட்டை கவர்ன்மெண்டு பண்ணை மானேஜர், சுதேசமித்திரன் பத்திராதிபர் கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியோர்களும், விவசாய சாஸ்திர வல்லோர்களும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேய, சுதேசப்பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| போர்ட்பயிண்டு செய்தது ரூ. | 1 | 4 | 0 |
| காலிகோ ,, | 2 | 0 | 0 |
| பருத்திப்பயிர் சாகுபடி | 0 | 4 | 0 |

## "ROYAL BRAND" RED MARKING INK

### உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்பு மை

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒருதடவை குறிபோட்டுவிட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு... ... ... 1 4 0

வியாபாரிகளுக்கும், ஒரேதடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் விலை பிரத்தியேகம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர்,
மதராஸ்.